தென்னவர்

தென்மராட்சிக் கல்வி வலயம்

சாவகச்சேரி.

2014

தென்னவள்

(மார்கழித் திங்கள் முழுநிலாநாள்
கலைவிழாச் சிறப்பு மலர்)

தென்மராட்சிக் கல்வி வலயம்,
சாவகச்சேரி.
2014

தென்னவள் வருகைக்குழு

தலைவர்:

திரு. சு. கிருஷ்ணகுமார்

வலயக் கல்விப் பணிப்பாளர்

தென்மராட்சிக் கல்வி வலயம்

ஆலோசனை:

திரு. க. க. ஈஸ்வரன்

தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,

ஆசிரியர் மத்திய நிலையம் - வரணி,

தென்மராட்சிக் கல்வி வலயம்

இதழாசிரியர்:

திரு. தி. அபராஜிதன்

ஆசிரியர்,

யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

மாகாணக் கல்வித் திணைக்களத்தின்
அனுசரணையுடன் தேன்மதாட்சிக் கல்வி வலயம்
நடத்தும்
மார்கழித் திங்கள்
முழுநிலா நாள் கலை விழா – 2013
காலம் : 2013.12.16 திங்கட் கிழமை
நேரம் : முப 09.00 மணி
இடம் : கலாசார மண்டபம்,
சாவகக்கேரி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தென்னவள் வருகைக்குழுவின் பேனாவிலிருந்து . . .

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் திட்டமிடலுக்கும் ஆலோசனைக்கும் இணங்கத் தென்மராட்சிக் கல்வி வலயம் முன்னெடுத்த மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலை விழா, தென்மராட்சியின் கலை ஆர்வலர்களுக்கு மீண்டும் ஒரு புத்துணர்வை, புது அத்தியாயத்தைத் துவக்கிவிட்டிருக்கின்றது. இக் கலைவிழா ஒட்டுமொத்தக் கலைஞர்களுக்கும் ஒரு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது என்றால் அதில் நூதனம் இல்லை. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையும் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞன் இ. முருகையனும் அழகுசெய்த தமிழ்நங்கை முழுநிலா நாளின் மார்கழித் திங்களில் புத்தொழில் பெற்று பொலிவுற்றுத் திகழ்ந்திருந்தாள்.

எமது கல்வி வலயத்திற்குட்பட்ட வலயக் கல்வி அலுவலகத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கொடையாளிகள் என அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றுகூடி ஒத்துழைத்ததன் பயனை 16-12-2013 அன்று அறுவடை செய்தபோது தென்மராட்சி மண் ஒரு கணம் பூரிப்பில் திளைத்திருந்தது. கலை ஆற்றுகைகள் இயல், இசை, நாடகம் என முத்தமிழும் ஒன்றுடன் ஒன்று விரவி நிற்க வெளியக அரங்கில் பண்பாட்டுப் பவனியுடன் கூடிய கவின் மிகு விழா கற்பனைக்கெட்டாத அற்புதங்களைப் படைத்திருந்தது.

இப்பெருமை மிகு விழாவின் விளைவுகளைப் பதிவுகளாக்கி, வெளியீடு செய்து வளரும் இளம் கலை வல்லோருக்கு வரலாறாக்கி உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருப்பவள் "தென்னவள்" என்னும் முழுமதியாள். இக்கலை மலர்மகள் முழுநிலா நாளின் அனைத்துப் படைப்புகளையும் அவ்வக் கலை ஆற்றல் மிக்க வல்லுநர்களால் கொடுக்கப்பட்ட வரிவடிவங்களால் இயற்றமிழாய் மெருகுபெற்றுத் திகழ்கின்றாள்.

இந்தப் பெரும்பணிக்கு வித்திட்ட பெருமை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரையே சாரும். இத்தகையதொரு பதிவை நாம் வெளியிட வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டிச் செயற்படுத்திக் கொண்டிருக்கும் கல்விப் பணிப்பாளரின் எண்ணத்தை நன்றியுடன் வரவேற்கின்றோம். இவ் அரும் படைப்புக்கு ஆக்கங்களை அள்ளித்தந்த வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றோம். "தென்னவள்" அணிபெற வாழ்த்துரைகள், பாராட்டுரைகள் வழங்கிய உயர்ந்த உள்ளங்களை நாம் மனதாரப் பூசிக்கின்றோம்.

அருமையான இம்மலர் ஆக்கத்திற்கு நிதி, மற்றும் புத்தக வடிவமைப்பு, சரவைப் பிரதிகளைச் சரிபார்த்துதவிய அன்பர்களுக்கும் மற்றும் யாவருக்கும் நன்றி கூறி மகிழ்ந்து தென்னவளை உங்கள் கையில் தவழவிட்டு மகிழ்கின்றோம். உங்கள் விமர்சனங்களும் ஆக்கபூர்வமான கருத்துகளும் எதிர்காலத்தில் இத்தகைய வெளியீடுகளுக்கு உந்துசக்தியாக அமையும் என நம்புகின்றோம்.

தென்னவள் வருகைக்குழு.

தென்னவளை அலங்கரித்த ஆக்கங்களுக்கு அந்த ஆக்கங்களைப் படைத்தவர்களே பொறுப்பாவார்.

பொருளடக்கம்

ஆசிச்செய்திகள்

1. வடமாகாண கல்வி அமைச்சர்
2. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்
3. வடமாகாண கல்விப் பணிப்பாளர்

வாழ்த்துரைகள்

1. தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்
2. தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர்
3. சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர்
4. மறவன்புலவு க. சச்சிதானந்தம்
5. ஓய்வுபெற்ற அதிபர் த. கந்தையா
6. ஓய்வுபெற்ற அதிபர் ஆ. வடிவேல்

கட்டுரைகள்

1. விழா இணைப்பாளரின் சிந்தையிலிருந்து . . .
2. மண் மகிழ மனம் குளிர
3. ஊர்திப் பவனி
4. தமிழ் மரபில் இன்னியம்
5. இன்னியத்தில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய வாத்தியங்கள்
6. நாட்டியக்கலையில் நவரசம்
7. காலந்தோறும் இசை
8. பின்னல் கோலாட்டம்

நன்றியுரை

தென்னவளின் ஒளி தேசமெங்கும் பரவட்டும்!

திரு. த. குருகுலராசா,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாண சபை.

வடமாகாண கல்வித்திணைக்களம் மாதந்தோறும் பௌர்ணமி விழாவினை ஒவ்வொரு வலயக் கல்விப் பணிமனை ஊடாக நடத்திவருகின்றது. கலையையும், வளர்ந்து வரும் கலைத்துறை மாணவர்களையும் கலைஞர் களையும் ஊக்குவிப்பதுடன், பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வருவதிலும் இவ்விழா உதவி புரிகின்றது.

2013 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் தென்மராட்சி வலயத்தால் இவ்விழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. இவ்விழாவின் நிகழ்வுகளை எழுத்துருவில் ஆவணப்படுத்தும் நோக்குடன் முதன்முதலாக தென்மராட்சி வலயம் முயன்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழால் அலங்கரிக்கப்பட்ட இப் பௌர்ணமி விழா நிகழ்வுகளை ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. அத்துடன் இம்மலரில் இவ்விழாத் தொடர்பான நிகழ்வுகள் கட்டுரை மூலம் வெளிவருவதும் இசை, தமிழர்களின் கீழைத்தேய வாத்தியம் தொடர்பான பல அம்சங்களைக் கட்டுரையாகத் தாங்கிவருவதும் மிகவும் ஆக்க பூர்வமானவையாகவும் எதிர்காலச் சந்ததியினருக்கு பயன்படத்தக்கவையாகவும் அமைந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது.

கலைக்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோன்று "தென்னவள்" என்ற பெயருடன் ஊரையும் முக்கியத்துவப்படுத்தி வெளிவரும் இம்மலரானது சிறப்புடன் வெளிவந்து மிளிர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்னவளே வாழி நீடூழி

சி. சத்தியசீலன்
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்
யாழ்ப்பாணம்.

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் கடந்த மார்கழித்திங்கள் முழுநிலா நாளில் நடத்திய கலை விழாவின் பதிவுகளைச் சுமந்து வரும் 'தென்னவள்' எனும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இன்னியம் எனும் தமிழர் பண்பாட்டு இசைவாத்திய அணியினை உருவாக்கி அதனை முன்னிறுத்தி கலைப்படைப்புக்கள், ஊர்திகள் சகிதம் சாவகச்சேரி நகரில் இருந்து A9 வீதி வழியாகச் சென்று தென்மராட்சி கலாசாரமன்றத்தில் கோலாகலமாக ஆரம்பித்த கலைவிழா பல்துறைசார் கலை ஆற்றுகைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முழுநிலா நாள் கலைவிழாவின் பதிவுகளை ஆவணப்படுத்தி புகைப்படங்களையும் கட்டுரைகளையும் தாங்கி இம்மலர் வெளிவருவது முன்னுதாரணமானதாகும். இவ்விழாவில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சி களை இறுவெட்டில் பதிவுசெய்து பாடசாலைகளிற்கு வழங்குவதன் ஊடாக மாணவர்களின் மனங்களில் கலை ஆர்வத்தினை ஏற்படுத்தி புதிய சிந்தனைகளுடன் அவர்களின் கலை வெளிப்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

சிறந்த திட்டமிடலுடனும் தென்மராட்சி மக்களின் ஒருங்கிணைந்த பங்களிப்புடனும் தென்மராட்சி கல்வி வலயம் முன்னெடுத்திருந்த கலைவிழாவின் கலை ஆற்றுகைகளைக் கட்டுரைகளாக்கி, இயற்றமிழுக்கு மெருகூட்டும் வகையில் நூலாக வெளியிட எண்ணிய சிந்தனையை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இம்மலர் உள்ளடக்கியிருக்கின்ற கட்டுரை கள் கலை ஆர்வலர்களின் அறிவுக்கு விருந்தாக அமைய வேண்டும் என வாழ்த்துவதோடு இந்நூலை உருவாக்கிய மலர்க்குழுவையும் கட்டுரையாளர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மலர்ந்திடுக தென்னவளே!

திரு. வ. செல்வராசா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

எமது திணைக்களத்தின் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் தென்மராட்சிக் கல்வி வலயம் மிகச் சிறப்பாக நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலாக்கலை விழாவின் பதிவுகளை காலத்தால் அழியாது நிலைத்திருக்குமாறு ஆவணப்படுத்தி அதனை ஒரு நூலாக வடிமைத்திருப்பது வரவேற்கத் தக்கதொன்றாகும். "தென்னவள்" என்ற பெயருடன் வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் என்னுள்ளம் பூரிப்படைகின்றது.

முத்தமிழும் சங்கமிக்க கலைநிகழ்ச்சிகள், ஊர்திப் பவனிகள், இன்னிய இசை வரவேற்புடன் ஆரம்பமாகி அரங்க நிகழ்ச்சிகளில் பல்வேறு நடன, இசை, நாடக நிகழ்ச்சிகளுடன் மிளிர்ந்த முழுமதி நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்து அறிவுக்கு விருந்தாகவும் அழியாத படைப்பாகவும் வெளிவரும் தென்னவள் என்றும் புதுப்பொலிவுடன் மலர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இத்தகைய அரிய முயற்சியில் ஈடுபட்டுச் செயற்பட்ட தென்மராட்சிக் கல்வி வலய பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், மற்றும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். இதுபோன்ற வெளியீடுகள் எமது கலைப்பொக்கிஷங்களைக் காலவெள்ளத்தால் அழியாது பாதுகாக்கும் உயர்வான முயற்சிகள் என்றால் அதில் மிகையில்லை. இவ் அரும் பணியினால் வெளிவரும் தென்னவளின் ஒளி தென்மராட்சி முழுவதும் பரவ வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் அகத்திலிருந்து . . .

திரு. சு. கிருஷ்ணகுமார்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை,
தென்மராட்சி.

இயற்கையின் கொடையுடன் இணைந்து பெற்ற வளத்துடன் குழைக்காடு என்னும் பண்புப் பெயரைப்பெற்ற தென்மராட்சியின் கல்விச் சமூகத்தினால் 2013-ம் ஆண்டின் மார்கழித் திங்கள் மதிநிறை நன்நாள் கலைவிழாவினை சீரிய முறையில் சான்றோரும், சபையோரும், சமூகமும் பாராட்டத்தக்க வகையில் தலைமைதாங்கி நடத்தி முடிக்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மனநிறைவடைகின்றேன். அருகிச் செல்லும் தமிழர் தம் பண்பாட்டின் அடையாளங்களை நினைவூட்டும் வகையிலும் மாணவச் செல்வங்களின் அழகியல் திறன்விருத்தியை வெளிக்கொணரும் நோக்காக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், தென்மராட்சிக் கல்வி வலய உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தினரது முழு நிறைவான பங்குபற்றுதலே இந் நிறைவான நிகழ்ச்சிக்கு காரணமாகும். குறிப்பாக நேர்த்தியான திட்டமிடலும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்பும் விழா வெற்றியின் மற்றுமொரு படியாகும். மேலும், நிகழ்ச்சியில் கலைநிகழ்ச்சிகளை அளிக்கை செய்த மாணவர்கள், அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகளை ஆற்றுகை செய்த ஆசிரியர்கள், அவர்களை நெறிப்படுத்தியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். குறிப்பாக தென்மராட்சியில் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்ட தமிழரின் பாரம்பரிய கீழைத்தேய கலைவடிவமாகிய "இன்னியம்" அனைவரினதும் பாராட்டையும் பெற்றது என்றால் அதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதனைக் கடுமையான பிரயத்தனத்தினூடாக அறிமுகம் செய்த பாடசாலை சமூகத்திற்கும் நெறிப்படுத்தியவர்களுக்கும் மனம்நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மேற்படி நிகழ்ச்சின் கலை வெளிப்பாடுகளுக்காக வெளியக, உள்ளக அரங்குகளைப் பயன்படுத்தியிருந்தமை ஏனைய வலயங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியான செயற்பாடாகும். அந்தவகையில் ஊர்தி பவனிகளையும் வெளியக ஆடற்கலை நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்த பாடசாலை சமூகத் திற்கும் அரங்காற்றுகைகளை மேற்கொண்ட கலைஞர்களுக்கும் அதனை நெறிப்படுத்தியவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் நீண்டகால இடைவெளியின் பின்னர் இவ்வாறான கலைப் படைப்புகள் எழுச்சியுடன் ஏற்றம் காணும் வகையில் அமைவதற்கு நேர் மனப்பாங்குடன் அர்ப்பண சிந்தையுடன் உழைத்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் பாராட்டுகள் உரித்தாகுக.

மேலும், மேற்படி நிகழ்ச்சிகள் தொடர்பாக அறிக்கைப்படுத்தி ஆவண மாக்கி எதிர்கால சந்ததி கற்றறிந்து கொள்வதற்காக எமது வலயத்தின் மூலம் எழுத்துருவிலான வெளிப்பாடாக "தென்னவள்" எனும் பெயரில் பிரசவிக்கும் நூலுருவாக்க முயற்சி முழுமதி நிகழ்ச்சியின் பெறுமதியை மேலும் மெருகூட்டியுள்ளது. அந்தவகையில் நூலுருவாக்க முயற்சியில் ஈடுபட்ட ஆசிரிய குழுவினருக்கும் அதற்குரிய ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்களுக்கும் அது முழுமையடைய நிதிப்பங்களிப்பை வழங்கியுதவிய கொடையாளர்களுக்கும் மனம் நிறைந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து முயற்சி தொடர வாழ்த்தி அமைகின்றேன்.❑

பிரதிக் கல்விப் பணிப்பாளரின் மனதின் வெளிப்பாடாய் . .

திருமதி சி. சிவநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)
வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி

வந்தோரை வரவேற்று வாழ வைக்கும் முக்கனிச் சோலையாம் தென்மராட்சியின் வரலாற்றில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மக்கள் மடைதிறந்த மார்கழிமாத முழுமதி நிறைநாள் நிகழ்ச்சியினை நிறைவுடன் நடத்திய பெருமையை தென்மராட்சிக் கல்வி வலயம் பெற்றது என்பதையும் அதன் பங்காளிகளில் நானும் ஒருவராக கூட்டு முயற்சியில் இணைந்து செயற்பட்டதிலும் பெருமையடைகின்றேன்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேற்படி செயற்றிட்ட நிகழ்ச்சியொழுங்கில் மார்கழி மாத முழுமதி நிகழ்ச்சியினை எமது கல்வி வலயம் சீரிய தலைமைத்துவ ஆற்றலுடைய மதிப்பார்ந்த வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வலயக் கல்வி நிலைய உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் முழுமையான அர்ப்பண சிந்தைகொண்ட முயற்சியாண்மையின் வெளிப்பாட்டில் நிறைவான தேர்ச்சி மட்டத்தை எட்டியது என்றே கூறுதல் வேண்டும்.

ஒரு தாயானவள் கர்ப்பமுற்று குழந்தையொன்றைப் பெற்றெடுப்பதற்கு முன்னர் எவ்வகையான நெருக்கீடுகளையும் சிரமங்களையும் எதிர்கொள்ள நேரிடினும் அக் குழந்தையின் பிரசவிப்பின் மூலம் அனைத்துக் கவலைகளையும் மறந்து எவ்வாறு பெரும் புளகாங்கிதம் அடைகின்றோளோ, அதேபோன்றதொரு உணர்வுடன் முழுமதி ஒன்றை மார்கழி பதினாறாந் திகதி எமது வலயம் சுகப் பிரசவித்த உணர்வினை எம்மால் பெற முடிந்தது என்றால் மிகையாகாது. இப்பிரசவிப்பிற்குக் காரணமாக முகம் தெரிந்த, தெரியாத பல சமூக நல் ஆதரவுடைய பெருமக்களது பங்களிப்பு நிகழ்ச்சியைப் பெறுமதியாக்கியது. எது எவ்வாறு இருந்தபோதும் கடந்த காலப் பௌர்ணமி விழாக்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் தம் கலைப்படைப்புகளையும் காட்சி நிகழ்ச்சிகளையும் வழங்கிய மாணவச் செல்வங்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும், கலை நிகழ்ச்சிகளை வெளிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளையும் நிகழ்ச்சி சிறக்க உடல், உள, பொருளாதாரப் பங்களிப்பை வழங்கிய அன்புள்ளங்களுக்கும் நன்றி. மேலும், இந்த நிகழ்வின் சிறப்பு நிலைபேறாக நிற்பதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் சிந்தனையின் வெளிப்பாடாய் "தென்னவள்" எனும் நூலுருவாக்க முயற்சிக்குப் பங்களிப்பு வழங்கிய படைப்பாளர்களுக்கும் நூலுருவாக்கக் குழுவினருக்கும் எனது மனம் நிறைந்த மகிழ்வான வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.❑

கோட்டக்கல்வி அலுவலரின் உள்ளத்தின் உணர்வுகளாய்..

திரு. கு. சிவானந்தம்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி.

மானிட வாழ்வின் மகத்துவத்தையும் மனத்தின் உள்ளார்ந்த மன வெழுச்சியையும் ஏற்படுத்தும் வடிவங்களில் ஒன்றே கலை ஆகும். அக் கலையானது ஒருவரது வாழ்வுக் காலத்திலும் வாழ்க்கையின் பின்னரும் பேசப்படுகின்ற ஒரு அம்சமாகும். அந்தவகையில் தென்மராட்சியின் கலைப் பாரம்பரியத்தையும் கல்விப் பாரம்பரியத்திற்கும் சமூகத்தில் பொருளாதார பாரம்பரியத்திற்கும் சான்றாக மார்கழி மாத முழுமதி நாள் நிகழ்ச்சியொன்றை தென்மராட்சி சமூகம் சுமார் மூன்று தசாப்தங்களின் பின் கண்டுகளித்து, மகிழ்ந்து பேசக்கூடிய வகையில் கல்விச் சமூகத்தின் பலரது உள்ளார்ந்த வெளிப்பாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்டமை தென்மராட்சி கல்வி வலயப் பாரம்பரியத்தின் ஒரு மைற்கல் என்றால் மிகையாகாது.

போர் வடுக்களைச் சுமந்த எமது பிரதேசம் மீண்டும் மிடுக்குடன் வளர்ச்சி கண்டு வரும் சமகாலத்தில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியின் வெளியக, உள்ளக அரங்குகளைத் தம் வசப்படுத்திச் சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலிலும் ஆலோசனைகளிலும் பல கல்விச் சிந்தனையாளர்களது அனுபவ ஆற்றல்களின் கருத்துகளையும் அபிப்பிராயங்களையும் உள்ளீர்த்து வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளமை பாராட்டுதற்குரியதே.

மாற்றமுறும் உலக ஒழுங்கில் மறந்துபோன தமிழர்களுடைய கலை, பண்பாடு, பொருளாதாரம் போன்ற வாழ்வியல் அம்சங்களை எடுத்துக் காட்டக்கூடிய பார்ப்போரை பரவசமூட்டும் சின்னஞ் சிட்டுக்களின் கலைப் படைப்பின் வெளிப்பாடுகளும் அரங்க கலைஞர்களின் ஆற்றுகைகளும் மனங் கொள்ளத்தக்கவை. இதனைப் பொறுப்புடனும் அர்ப்பண சிந்தையுடனும் கலையுணர்வுடனும் முன்வைக்க உழைத்த துறை சார்ந்தோரைப் பாராட்டுவதில் நானும் பெருமையடைகின்றேன்.

பலரது கூட்டுமுயற்சியின் உருவாக்கத்தின் அறுவடையே இவ்வாறான நிகழ்ச்சியொன்றை வெற்றிகரமாக நடத்தமுடிந்தமை என்றால் மிகையாகாது. அந்த வெற்றிக்குக் கால்கோளாக இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், ஏனைய வலய, கோட்ட உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம், நன்கொடை யாளர்கள், விழா ஏற்பாட்டுக் குழுவினர், கலைஞர்கள் எனப் பல்வேறு மட்ட துறையினரையும் மனம்நிறைந்து பாராட்டுவதில் மனம் நிறைவடைகின்றேன்.

அதற்கு மேலாக எமது வலயக் கல்விப் பணிப்பாளரின் சிந்தனை யோட்டத்தின் மற்றுமோர் செயல்வடிவாக முழுமதி நிகழ்ச்சியின் சிறப்பினை எதிர்கால சந்ததியும் அறிந்து கொள்வதற்கு ஏற்றதாக "தென்னவள்" எனும் பிரதேசத்தின் பெயரைப் போற்றி நினைவு கூரத்தக்க வகையில் அனைவரது கரங்களில் தவழ்ந்து காலத்தால் நிலைத்து நிற்கக் கூடிய வகையில் மேற் கொள்ளப்படும் நூலுருவாக்க முயற்சியின் முயற்சியாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவிப்பதில் உளப்பூரிப்படைகின்றேன்.❑

காந்தளகத்தின் கரங்களிலிருந்து . .

மறவன்புலவு சச்சிதானந்தன்

2044 மார்கழிமுதல் நாள் (16.12.2013) உரியநேரத்தில் விழாவுக்கு வந்துசேர்ந்த எனக்கு வியப்புக்குமேல் வியப்பு. விழாவின் தொடக்க ஊர்வலத்துக்குத் தயாரானவர்களைப் பார்த்தவாறு வந்தேன். உங்களின் செயல்திறனில் மயங்கினேன். உங்கள் ஒழுங்கமைப்பினை வியந்தேன். உங்கள் கட்டளைக்குரல் என்னை மட்டுமன்று, அனைவரையும் படைஒழுங்கில் பணியவைத்ததே!

முன்பு தென்மராட்சியின் பொங்கல் விழா ஊர்வலங்களைக் கண்டுகளித்தவன். 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் ஊர்வலத்தை அமைப்பதில் ஒருவனாயிருந்தவன்.

மீண்டும் அதேஎழுச்சி, அதே ஆர்வலர்களின் சங்கமம், அதே உணர்வுப் பெருவெள்ளம். அதே ஊர்வலமென்னும் எடுத்துக்காட்டு. மாட்டுவண்டியில் தொடங்கி இன்னியத்தில் முடிந்த காட்சிகளால் என் கண்கள் பனித்தன. என் மெய் விதிர் விதிர்த்துச் சிலிர்த்தது. கனவில் மிதக்கிறேனா என அடிக்கடி என்னைக் கேட்டுக் கொண்டேன்.

புது மணல் பரப்பி, வாழைகள் கட்டி, மாவிலை தோரணங்களை வரிசையாக்கி, விளக்குகளை ஏற்றி, நிறைகுடங்களை அடுக்கி, மாலைகளின் சோலையாக்கி, வரவேற்புக்கு இலக்கணம் வகுத்த ஊர்வலச்சாலை இல்லத்தார் என் நினைவில் நீங்கார்.

திருநீறு நெற்றிக்காய், சந்தனம் பொட்டுக்காய், பன்னீர் தெளிப்புக்காய், மாலைகள் கழுத்துக்காய், மண்டபவாயிலில் மங்கலமாதர் மகிழ்ந்துவந்து வரவேற்ற காட்சியும் கனவல்ல.

இருக்கைவரிசை ஒழுங்குக்குள் பெற்றோர், முதல்வர், ஆசிரியர், மாணவர், ஆர்வலர் என யாவரும் விழா முடியும்வரை கலையாமல் இருந்தமை கண்கொளாக் காட்சி.

மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ் வாழ்த்து வரிகளை வெட்டாமல் கொத்தாமல் முழுமையாக இசைத்த மாணவிகளின் குரல் வளமும், இசை இனிமையும் உச்சரிப்புச் செழுமையும் தமிழின் வெற்றி.

தக்க பரதநடன ஆடைக்குள் புகுந்து, மேடைக்குள் ஓடிவந்து, இசைக் கேற்ற பதம் அமைத்து, சொற்கட்டுகளுக்கு அடவுகிளர்த்தி, தாளத்துக்குள் சிக்கிய மத்தளத்துக்குப் பாதம் அசைத்த மாணவச் சிட்டுக்களை எங்கே தேடிக் கண்டீர்கள்? பார்வையாளர் கண்களை இமைக்க மறந்தனர். காற்றோடு கலந்த இசை காதுகளுக்குத் தேனானது.

சொல்லவல்ல கவி நடையில் சொற்கட்டுகளில் எதுகைமோனை தவழ, உச்சரிப்பில் நளினம் கொஞ்ச, பொய்யழகும் புனையழகும் பூத்தகருத்துகளை அலை அலையாய் விட்டெறிந்த மேடை அறிவிப்பாளரை, நிகழ்ச்சித் தொகுப்பாளரைப் பாராட்டுகிறேன்.

புராண படனத்தையும் அரிச்சந்திரன் நாடகத்தையும் மீட்டுருவாக்கிய விந்தையால் விழிப்புற்றதே மரபுசார் கலைத்தொழில்.

வடமாகாண முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண அவை உறுப்பினர், வட்ட அவை (பிரதேச சபை) உறுப்பினர், கல்வியாளர் என அரங்கு பொலிருந்தது.

தென்மராட்சிக் கல்வி வலய கலைவிழாப் பெருமுயற்சிகளுக்குப் பாராட்டை இவர்களுள் மிகச் சிலரே சில வரிகளில் எடுத்துக்கூறினர். வலயத்தின் முழுநிலாநாள் பெருமுயற்சியை ஊடகங்கள் மழுங்கடிக்குமாறான அரசியல் கருத்துரைகளை ஓங்கவிட்டனர். முழுநிலா நாள் கலைவிழாவின் முழுமையை உலகம் தெரிந்து கொள்ள முடியவில்லையே.

அன்பைக் குழைத்து, சுவையை நிறைத்து, சத்து வகையைப் பெருக்கி, பரிமாறும் பண்பைப் பெருக்கிய மதிய உணவு விருந்தால் நெகிழ்ந்தேன்.

விழாவின் நெடிய நிகழ்ச்சிகளில் நான் சார்ந்த நிகழ்ச்சிகளை மட்டும் காணொலியாக்கினேன். பார்க்க, பகிர்க. http://youtube/EHGsS4bSAIU முகநூலிலும் https://www.facebook.com/sachithananthan, (http://www.facebook.com/maravanpulo.chavakachchery?fref=ts) கூகுள் கூட்டலிலும் (http://plus.google.com/105502240274144832531/posts) குறிப்புப் பகிர்ந்தேன், பார்க்க.
மறவன்புலவு வலைப்பூவிலும் (http://maravanpulo2.blogspot.com/2013/12/blog-post_25.html) பார்க்க, பகிர்க.

இந்த மாபெரும் விழாவில் என்னையும் ஒரு பொருட்டாகக் கருதிப் பாராட்டிய உங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

உங்கள் முயற்சிகள் தொடர்வதாக. உங்கள் கல்விப் பணி விரிவதாக, தென்மராட்சி செழித்து வளர்வதாக,

அமெரிக்க அதிபர் ஒபாமா பாராட்டி விருது கொடுத்து அறிவியலாளர் தென்மராட்சியாளர் முனைவர் சிவலிங்கம் சிவநாதனை அடுத்த ஆண்டு அழைத்துப் பாராட்டலாம் என்ற என் விதப்புரை மிகையாயின், பொருட்டற்ற.❑

த. கந்தையா
துணை இயக்குநர்
கல்வியியல் ஆய்வு நிறுவனம்
சென்னை.
17-12-2013

உயர்திரு சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தென்மொழிப் புலம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஐயா!

வணக்கம். விருப்பத்தெரிவும் பாராட்டும்.

16-12-2013 அன்று தென்மொழிப் புலத்தில் நடத்தப்பட்ட முதுகலை விருப்பத் தெரிவுக்கான வினாத்தாள் அமைப்பு முறையை பாராட்டாமல் இருக்க முடியாது. குறித்த நேரத்தில் ஒதுக்கப்பட்ட அறைகளை உரிய நேரத்தில் உரியவர்களும், விருப்பத்தெரிவர்கள் அனைவரும் வரவழைத்து அமர்த்தப்பட்டமை, வினாத்தாள் வழங்கும் முறை, விடைத்தாள் பெறும் முறை, விருப்பத்தெரிவர்களின் ஐயங்களை நிவர்த்தி செய்தமை, விருப்பத்தெரிவர்கள் யாவரும் தமமை விருப்பத்தெரிவர்களாகவும் நேர்த்தி மிக்க பயிற்சி பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டமை, சகல விருப்பத்தெரிவும் இணையவழியில் நிகழ்ச்சியாக நடாத்தப்பட்டமை, சோதனை மேற்கொள்ளப்பட்டமை, போன்ற அனைத்துவிடயங்களும் தங்கள் ஆளுமையையும் திட்டமிடற்சிறப்பையும் பாராட்டுவதற்கு மிகச் சிறந்தவையாகும். மேலும் பல்வேறு கால எல்லைக்குள் விருப்பத்தெரிவர்களின் விடைத்தாள்களும் சிறப்பாக மதிப்பீடு செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது.

எதிர் காலத்தில் தென்மொழிப் பாடநெறிகள் யாவும் செழிப்பாக நடைபெற மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
த. ஸ்ரீஸ்வரூபா.
துணை இயக்குநர்.

உ
சக்தி துணை

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்" (திருக்குறள்)

திருஅருள்ஜோதி ஆ.வடிவேலு
"வடிவகம்"
தும்பளை
பருத்தித்துறை
28.101.2014

உயர்திரு. சி. கிருஷ்ணகுமார்,
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிமனை,
தென்மராட்சி.

ஐயா!

அடியேன் 2000ஆம் ஆண்டு ஓய்வு பெற்றமையின் கல்விப்புலம் சார்ந்த அதிகமான நிகழ்வுகளில் பங்குபற்றியதில்லை. ஆயினும் கடந்த வருடம் மார்கழி மாதம் தங்களின் தென்மராட்சிப் பிரதேசத்தில் நிகழ்ந்த குடும்ப நிகழ்வில் அழையாத விருந்தாளியாகக் கலந்து கொண்டு அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றால் அது மிகையாகாது.

வைத்தியரை வறுமையும் வாழ்ந்தோன் இந்த உண்மை 1990ஆம் ஆண்டு தென்மராட்சி இடப்பெயர்வின்போது வலிகாமம், வடமராட்சி ஆகிய இரண்டு பிரதேசம் சார்ந்த மக்களையும் அரவணைத்து அனுசரித்த தமிழர்களை. அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிப் போகும் காலத்தில் தென்மராட்சியை விட்டுப் பிரிகின்றோமே என்று மிக்கும் தென்மராட்சியை விட்டுச் சென்றார்கள். ஏனெனில் இனிய கலைநயமொடு தமது இருப்பதற்கு இல்லிட வசதிகளை மொழியியல் வழியொற்று ஏற்படுத்தி உண்பதற்குச் சொல்லொணாத் தொல்லைகள் இருப்பதற்கு இன்றியமையாத பல பல பழவகைகளை யும் உண்ணக் கொடுத்து உபசரித்தவர்கள் தென்மராட்சி மக்கள். இந்த நிலை வேறு எங்குமேயில்லை காண மகிழ்ந்தேன். எனவே மரபுடைய தென்மராட்சிப்

(P. T. O)



தேசமாக ஒன்றுபட்டிருக்க வேண்டிய மனிதர்களை
யிடமாக விலக்கி வைத்து, அவர்களும் அனைவரும் அமைதி
விழாவினை அமைத்து விட்டது. அந்த விழாவினைத்தை
அடையாளம் அருத்துவரும் முன்னோர் வழிவழி
ய மதிப்பிற்குரியவர்களும் எவ்வாறு திட்டமிட்டுச் சிறப்பாகக்
கொண்டாட வேண்டும் என்றும், அந்த நிகழ்வுகளும் விழா
சார்பாகப் பத்திரிகையில் வெளிவரச் செய்ய வேண்டும்
என்ற வேண்டுகோளைச் சமர்ப்பிக்கப்பட்டவர்களுக்கு
உறுதுணைக்கக்கூடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்துக்கும் தூண்டுதலாய் அமைந்த
தோட்டாட்சி வலயக்கல்வி அலுவலர்களும், வலயப்
பணிமனையினரும், வலயம் சார்ந்த பாடசாலை அதிபர்
களும், ஆசிரியர்களும், மாணவர்களும்
யோர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும்
பெருமக்களும், நிறுவனங்கள் சார்ந்த அதிகாரிகள்
அலுவலர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

நன்றி. வணக்கம்

இங்ஙனம்
உண்மையுள்ள

A. Vadivelu
Retd. Principal
THUMPALAI SOUTH
POINT - PEDRO

விழா இணைப்பாளரின் சிந்தையிலிருந்து . . .

கோபாலபின்னை கயிலாசநாதன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(அழகியல்)
தென்மராட்சிக் கல்வி வலயம்

மனிதனொருவன் தனது கைகளைக் கொண்டு வேலைகளைச் செய்யும் போது அவன் தொழிலாளி ஆகிறான். கைகளையும் மூளையையும் பயன் படுத்தும்போது அவன் கைவினைஞன் ஆகிறான். கைகளையும் மூளை யையும் உள்ளத்தையும் ஒன்றிணைத்துப் பயன்படுத்தும்போதே அவன் கலைஞன் ஆகிறான். படைப்பாற்றல் என்பது பல படிநிலைகளைக் கொண்ட தொரு மனவெளிப் பயணிப்பாகும். இந்தவகையில் வட மாகாணக் கல்வித் திணைக் களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயத்தால் 16-12-2013 அன்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்ட மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைநிகழ்ச்சிகளிற் பெருவீதமானவை மேற்குறிப்பிட்ட வாறு பயணிப்பின் கணிசமான அளவு தூரத்தைத் தொட்டவையாகவே அமைந்திருக்கின்றன.

ஆண்டுகள் 2011, 2012 முழுநிலா நாள் கலை நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும்போது, 2013 ஆம் ஆண்டுக்கான கலைநிகழ்ச்சிகளும் விழா முன்னெடுப் புகளும் "பிரமாண்டமானது" என்ற பதத்துக்குள் அடங்குபவையாகவும் அண்ணள வாக ஆயிரத்துக்கும் சற்றுக்குறைந்த எண்ணிக்கையான கலை இரசிகர்களைப் பரவசப் படுத்தியவையாகவும் இருந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதோர் அவதானிப்பாகும். இயந்திரயுகத்திலிருந்து விடுபட்டு மீளவும் எம்மைப் பழைய யுகமொன்றுக்குள் ஊர்திகளும் ஊர்திகளின் பின்னால் ஆற்றுகை செய்யப்பட்ட கலை வடிவங்களும் அழைத்துச்சென்றுமுள்ளன.

"இன்னிய அணியொன்றை உருவாக்கி இவ்விழாவின்போது இசைக்க வைக்க வேண்டும்" என்ற எமது வலயக் கல்விப்பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அவர்களின் நீண்ட நாள் பேரவாவானது. இந்நாளிலேயே நிறைவெய்திற்று. இன்னியத்துக்கான இசைக்கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும் பயிற்று விப்பாளர்களுக்கு வழங்குவதற்குமான நிதி மூலத்தை 'World vision' ஊடாகப் பெறுவது வரை அவர் செயற்பட்டுள்ளார். தென்மராட்சியில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட இன்னிய அணியாக யா/உசன் இராமநாதன் மகா வித்தியா

லயம் திகழ்வதுடன் இப்பெருமுயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இன்னிய அணிக்குரிய மாணவர்கள், இப்பாடசாலைச் சங்கீத நடன ஆசிரியைகள், இப்பாடசாலை அதிபர், நாதஸ்வரக் கலைஞர், தவில் கலைஞர் இவர்களுடன் சங்கீத, நடன ஆசிரிய ஆலோசகர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். இதுவோர் நீண்ட படிநிலைகளைக் கொண்ட முயற்சி என்பதால் அதுபற்றிக் குறிப்பிட வேண்டிய தேவையும் கட்டாயமும் பொறுப்பும் எனக்குள்ளது.

முழுநிலா நாள் கலை விழா என்பதுடன் ஏனைய சில விடயங்கள் இணைக்கப்பட்டாலும் கலைநிகழ்ச்சிகளே மையப்பொருள் ஆகிறது. இங்கு ஆற்றுகை செய்யப்பட்ட வரவேற்பு நடனம் தாளத்திற்குரியதாகப் பயிற்று விக்கப்பட்டபோது அங்கு வறட்சி நிலையொன்று தென்பட்டது. இக் காரணத்தைக் கருத்திற்கொண்டு பாடலுக்குரியதாக மாற்றப்பட்டுச் செழுமைப் படுத்தப்பட்டது. ஆசிரியர்களால் இசைக்கப்பட்ட மருதநிலக் கானம் காதுக்கு இனிமையைத் தந்ததுடன், காட்சியாகும் படிமநிலைகளையும் காட்டிச் சென்றுள்ளது. பெண்குரலை ஆண்குரலும் ஆண்குரலைப் பெண் குரலும் தூக்கல் அடையச் செய்துமுள்ளன. மாணவிகளால் பின்னற் கோலாட்டமொன்று இலய வெளிப்பாடுகளுடன் செய்து காட்டப்பட்டது. இசைக்கான நளின அசைவுகள் நிறையவே இருந்தபோதும் பின்னல் பின்னப்படாமை ஒரு குறைபாடு ஆகிவிட்டது. ஆசிரியர் இருவர்களால் அவைக்கு ஆற்றிய புராண படனம் 'பிசிறு' அற்றமுறையில் ஒரே அதிர்வெண்ணில் ஆற்றொழுக்காக நகர்ந்த வண்ணமிருந்தது. பயிற்சிகளின்போது செப்பனிட்டுச் செப்பனிட்டு மெருகேற்றிய ஆசிரியர்களின் நடனமான நவரச நாயகிகள் பலரையும் ஈர்த்ததொரு நிகழ்ச்சி யாகவிருந்ததுடன் விரைவையும் விரைவின்மையையும் தேவைகருதி ஒரு தளத்தில் கொண்டு வந்துமுள்ளது. முகவெளிப்பாடுகளும் முத்திரைகளும் உடை அலங்கரிப்பும் கவனத்தை ஈர்த்த அம்மசங்களாகின்றன. மாற்று வலுவுடையோர் நிகழ்ச்சியின் கீழ் பாடல் இசைத்த சிறுமியின் 'குரல்' சுத்தமும் தயக்கமின்மையும் கவனிக்கத்தக்கவையாகவுள்ளன. கைவிரல்களுடன் சுளகு கள் பொருத்தப்பட்டுள்ளனவா என ஐயம் கொள்ளத்தக்க வகையில் கிராமியக் கதம்பம் நிகழ்ச்சியில் வந்துசென்ற மாணவிகளின் கைவீச்சு கண்ணுக்குள் நிற்கிறது. மிக விரைவாகவும் அதேநேரம் சீராகவும் ஒத்திசைவைப் பேணியும் நர்த்தனம் செய்துள்ளனர். இவர்களுடைய ஒப்பனை, ஆடை அலங்கரிப்புகள் வசீகரிக்கத்தக்கவையாக இருந்தன. கிராமியக் காற்று திடீரென வீசிச் சென்றுள்ளது.

ஆட்டங்களுக்கான நட்டுவாங்கமும் பிற்புலப் பாடல்களும் கலைஞர் களாலேயே வழங்கப்பட்டன. உயிர்ப்பற்ற முறையில் நாம் இறுவட்டுக்களைப் பயன்படுத்தவில்லையென்பது மிகவும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். பல பாடசாலை மாணவர்களும் பல பாடசாலைகளின் அழகியற் பாட ஆசிரியர்களும் ஒன்றிணைந்து ஆற்றுகைகளை முன்வைத்தமை இன்னோர் சிறப்பம்சம் ஆகும். பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குக் கட்டும் பலூன்களையோ அல்லது பூப்புனித நீராட்டுவிழா வளைவுகளையோ நாம் மண்டப, வாயில் அலங்கரிப்புகளில் பயன்படுத்த வில்லையென்பதுடன் இயற்கையானவற்றுடன் சில செயற்கைப் பொருட்களையும் இணைத்தே மண்டபத்தை அலங்கரித்துமிருந்தோம். இவ்விழாவானது பெருவிழாவாகப் பரிணமிப்பதற்கு உதவிய யாழ்ப்பாணத்து ESP நாகரட்ணம், சாரங்கா நகைமாடம், வாணி ரெக்ஸ், அருள் விநாயகர் மோட்டோர்ஸ் ஆகிய வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் சாவகச்சேரியில் இயங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி முகாமையாளர்களுக்கும், அம்பிகா மருந்துச்சாலை உரிமையாளருக்கும், தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்க தலைவருக்கும், சாவகச்சேரி வர்த்தக சங்க தலைவருக்கும், சுவிஸில் இயங்கும் 'ஆலமரம்' அறக்கொடையைச் சேர்ந்த திரு. ஏ. இளங்கோவிற்கும் நாம் மனப்பூர்வமான நன்றியைக் கூறிக் கொள்கின்றோம். இவர்களால் மனமுவந்து வழங்கப்பட்ட நிதிகளாலேயே துணிவுடன் எமது விழாவை ஒப்பேற்ற முடிந்தது. இவற்றுடன் கரிகணன் தனியார் நிறுவனம் (யாழ்ப்பாணம்) எமக்கு இலவசமாக அழைப்பிதழ்களை அச்சிட்டுத்தந்துமுள்ளது. நாம் கோரியதுக்கு இணங்க அவ்வழைப்பிதழ்களை அழகுறப்பதிப்பித்த அந்நிறுவன உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விழாவில் வழங்கப்பட்ட ஓர்கன் இசை, சாஸ்திரிய இசை, மெல்லிசை, மயானத்தின் மைந்தன் நாடகம் ஆகியன திருப்தியளித்தவையாக இருந்தபோதிலும் இன்னும் மெருகேற்றப்படுவதற்கு இடமுள்ளனவாகவும் தென்படுகின்றன. சிறுமியின் பேச்சானது அவளின் வயதுக்கேற்ற முதிர்ச்சியைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நிலாப்பாட்டு இந்த விழாவின் முன்னுரையாகப் பாட்டு வடிவில் இருந்ததுடன் இதுவோர் புது அறிமுகமாகவும் கொள்ளத்தக்கது.

பல, பல செயற்பாடுகள் எல்லாவற்றையும் இணைக்குமொரு பெரு முயற்சியாகவே இவ்விழா அமைந்துள்ளது. தொய்வுறாமல் முன்னெடுப்ப

தென்பது சிரமமான பணியாகவும் இருந்தது. இந்தவகையில் எனக்குக் கைகொடுத்த வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர் கள், அழகியற் பாட ஆசிரியர்கள், ஏனைய பாட ஆசிரியர்கள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவை தவிர, வேறு வழிகளிலும் பலர் உதவியுள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றி.

உண்டி கொடுத்தோன் உயிர் கொடுத்தோன் என்பதற்கமைய சிவா ரேடிங் கொம்பனி உரிமையாளர் திரு. சிவராஜா அவர்கள் எமது மேலான நன்றிக்கு உரியவராகிறார். எந்தவிதமான மறுப்புகளும் இன்றி மனப்பூர்வமான அப்பெரும் பணியை எமக்கு வழங்கியிருக்கிறார். இப்பணிக்குத் துணைநின்ற யா/டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களுக்கு வலயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொய்வுறாது மேடையை முகாமை செய்தவர்களும் நிகழ்ச்சி அறிவிப் பாளர்களும் மங்கல இசையை வழங்கிய தங்கவேல் குழுவினரும் இந்த விழாவின் உயிர்நாடியாக இருந்துள்ளார்கள். ஒலியமைப்பின் சீரின்மையால் தரமான நிகழ்ச்சிகள் சிலவும் முழுமையைத் தொடாது சென்றுள்ளன. பிசிறும் கூவலுமின்றி ஒலியை ஒழுங்காக்குவதுடன் மிக நுண்மையான தாழ் அதிர்வு களையும் சுத்தமாகக் கேட்கும் வண்ணம் இலத்திரனியல் சாதனங்களைக் கையாள்வதும் ஒலியமைப்பாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டியனவாகும்.

இந்த விழாவில் கலையை ஆற்றுகை செய்த கலைஞர்கள் எல்லோரும் முழுநிலா நாளை முழுமையாக்குவதற்குதமது உணர்வுபூர்வமான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள் என்பது ஒரு வெளிப்படையான உண்மையாக இருக்கிறது. பிரதம, சிறப்பு விருந்தினர்களை நிறைகுடம் வைத்து வரவேற்ற வர்த்தகர் களுக்கும் ஊரவர்களுக்கும் வீதியெங்கும் கொடிகளை நாட்டி விழாவுக்கொரு கம்பீரத்தை ஏற்படுத்திய தென்மராட்சி கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாள ருக்கும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருக்கும், உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் கலாசார மண்டபத்தை எமக்கு வழங்கிய தென்மராட்சிக் கலைமன்றத் தலைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.❑

மண் மகிழ மனம் குளிர வெருகூட்டிய மார்கழித் திங்கள் முழுநிலா

தி. அபராஜிதன்
ஆசிரியர்
யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்ம ராட்சிக் கல்வி வலயம் மகோன்னதமாக நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா பற்றிய பார்வைக்குரிய பந்திக்குள் வாசகர்களாகிய உங்களை அழைத்துச் செல்கின்றேன். தமிழர் தம் கலை, பண்பாடு, மற்றும் வாழ்வியல், பொருளாதார நடத்தைகளைப் பேணுகின்ற வகையிலும் அவற்றைப் பாதுகாத்துச் சிதைவடைந்து விடாது எம் எதிர்கால சந்ததிக்குப் பரிமாற்றம் செய்ய வேண்டிய தன் முக்கியத்தை உணர்ந்து வடமாகாணக் கல்வித் திணைக்களம் மாதம் ஒருமுறை வரும் முழுநிலாவினை வடமாகாணத்தில் அமைந்துள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களில் பன்னிரண்டு மாதங்களும் ஒவ்வொரு வலயமும் தனது பிரதேச கலை, பண்பாட்டு, பொருளாதார, வாழ்வியல் அம்சங்களை பிரதி பலிக்கும் வகையில் சுயாதீனமாக ஒழுங்குபடுத்தி முழுநிலாக் கலை நிகழ்ச்சி எனும் செயற்றிட்டத்தைப் பின்பற்றி வருகின்றது. அந்த ஒழுங்கில் வருடத்தின் நிறைவு மாதமாகிய மார்கழித் திங்கள் கலைநிகழ்ச்சிக்குரிய மாதமாக தென்மராட்சிக் கல்வி வலயத்தைப் பிரகடனப்படுத்தியிருந்தது. அதற்கேற்ற வகையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்களின் சீரிய தலைமைத்துவத்திலும் தென்மராட்சியின் கல்வியியலாளர்களின் திட்டமிடலிலும் சிறந்த ஒழுங்க மைப்பிற்கும் ஏற்ற வகையில் வந்தோரை வரவேற்று வாழவைக்கும் தென்ம ராட்சிக் கல்விச் சமூகம் மிகச் சிறப்பாகக் கடந்த கால பௌர்ணமி விழாக் களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல் வெளியக, உள்ளக அரங்குகளைப் பயன்படுத்தி எழுச்சியுடன் ஏற்றம் காணும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது என்பதற்கு மாற்றுக்கருத்திருக்க முடியாது.

மேற்படி நிகழ்ச்சியின் வெளியக காட்சி கற்பக தருக்களுடன் கடல் வளத்தையும் காணி நிலத்தின் ஏற்ற விவசாய நடவடிக்கைகளையும், மார்கழிமாத திருவெம்பாவை வழிபாட்டின் மகிமையையும், இலக்கியச் செல்நெறியில் அதிகமானும் ஒளவைப் பிராட்டியும், மறந்து போன மாட்டுவண்டிப்

பவனியுடன் கூடிய ஊர்திப் பவனிகள் A9 பாதையை எழில்மிக்கதாக்கின. பல பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கொடிகாமத்தில் இருந்து தென்மராட்சியின் வீதியூடாக தைப்பொங்கல் விழாவின் பட்டிப் பொங்கல் சிறப்பை எடுத்தியம்பும் வகையில் காளை மாடுகளின் கழுத்தில் மாலையிட்டு கொம்பு சீவி நிறமிட்டு மாட்டு வண்டிச் சலங்கை ஒலி ஒலிக்க அலங்காரப் பவனியிலே உலாவி வந்த பண்பாடு காணாமல் போனதை மீண்டும் ஒருமுறை காட்சிக்குக் கொண்டு வந்ததாக இது அமைந்திருந்தது. எனினும் மாட்டு வண்டியைச் செலுத்தக் கூடிய சாரதிகள் நம்மவர்களில் இப்போது இல்லை என்பதும் கவலைக்குரிய தாகின்றது.

அவற்றுள் தென்மராட்சி இலக்கிய அணியினரின் நெல்லிக்கனி கொடுத்த கதையின் காட்சிப் படிமத்தை மாட்டு வண்டியில் மண்வாசனையின் வெளிப் பாடாய் வலம் வந்தமை 21 ஆம் நூற்றாண்டில் வாழும் எம் இளம் சந்ததி யினருக்குக் காணக்கிடைத்த பெரும்பேறாய் அமைந்தது. ஔவைப் பிராட்டி யினதும் அதியமானினதும் ஒப்பனை இருவரும் மீண்டும் ஒரு பிறப்பெடுத்தது போல் உதயமாயிற்று.

கச்சாய் பாடசாலை சமூகத்தின் ஆதரவில் கடலோடு ஒன்றித்த எம்மவர்களின் வாழ்வியல் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தும் "வள்ளப் பொங்கல்" காட்சி ஊர்தி பல செய்திகளைச் சொல்லிற்று அதாவது "இயற்கையே எம் இருப்பு இணைந்து வாழ்வதே எம் பொறுப்பு" "வல்லமையும் வலிமையுமே வாழ்வியலை மேம்படுத்தும்" "எழுத்தறிவே எழுச்சியின் வடிவம் எண்ணறிவே ஏற்றத்தின் வடிவம்" போன்ற பதாதைகளைத் தாங்கிய வண்ணம் வருகை தந்ததும், வளம் கொழிக்கும் வரணி மத்திய கல்லூரியின் சமூகத்தின் வெளிப்பாடாக கற்பகதருவின் பயனை பறைசாற்றுகின்ற வகையில் அருகிவரும் அதன் உற்பத்திப் பொருட்களையும் அதன் பாவனையின் பயனுறுதியையும் அதைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் ஆடவர்களின் ஆடல் பாடலுடன் அசைந்தாடி வந்தமை ஆனந்தத்தின் வெளிப்பாடாய் அமைந்திருந்தது. மேலும் வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதிபலிப்பாக மார்கழி மாதத் திருவெம்பாவை திருப்பாட்டுடன் "இந்துவாய் வாழ்ந்து இனியன செய்து ஆன்மீக வாழ்வில் ஆனந்தமடைவோம்" எனும் வாசகத்தைச் சுமந்த வண்ணம் வட்டவடி வாகனத்தில் வலம் வந்தமை ஆன்மீக ஆதாரத்தை ஆணித்தரமாய் காட்டி நின்றது.

அத்துடன் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் திருநாட்டின் சீவனோபாயமாகிய விவசாயச் செய்கையின்

பாரம்பரிய முறையிலான துலா மிதித்து விவசாயம் செய்யும் தொழில்பற்றிய நினைவுபடுத்தலையும் "ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை, என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை" எனும் பாடல் வரிகள் மூலம் பவனி வந்தமை பார்ப்பவர்களைப் பரவசமூட்டியது. மேலும் அந்நிலை தற்போது நம்மவரிடையே அருகி வரும் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் ஊர்திப் பவனி ஊர்ந்து வந்தமை நாம் கடந்து வந்த பாதையையும் புராதன தொழில் முறையையும் மீள நினைவூட்டிற்று.

மேலும், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய சமூகத்தின் வெளிப் பாடாக புறநானூற்றின் புரவலர் பற்றியும், அவர்கள் போல் வேடம் புனைந்து இசை மழையில் நனைந்து ஆண் பெண் இருபாலரும் வருகை தந்தமை எம்மவர்களுக்குப் புராதன கால புலவர்களினது புலக்காட்சியை புலப்படுத்தி நின்றது. மேற்குறித்த காட்சிப் படிமங்களை கண்ணுக்கு விருந்தளிக்கக் கூடிய வகையில் கற்பனைத் திறனுடனும் கச்சிதமாகவும் களத்தில் விட்ட பாடசாலை களை பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வூர்த்திகள் முன்னே செல்ல தமிழர் தம் பண்பாட்டை எடுத்தியம்புகின்ற ஆடற்கலையின் சிறப்பை அல்லாரை வித்தியாலய மாணவர்களின் காவடி நடனமும், நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்களின் கோலாட்டமும், மிருசுவில் நோ.த.க பாடசாலை மாணவர்களின் கும்மி நடனமும், கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களின் ஒயிலாட்டமும், வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் கரகாட்டமும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மாணவர்களுடைய செம்பு நடனமும் கைதடி முத்துக் குமாரசுவாமி வித்தியாலய மாணவர்களின் வெண்ணிற அன்ன நடையும் வெளியக காட்சி நிகழ்ச்சிகளை வெற்றிக்குரியதாய் மாற்றியிருந்தன.

அதற்கு மேல் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆசிரியர்களுடைய பெரும் உழைப்பின் பேறாக தமிழர்களின் அடிப்படை பண்பாட்டம்சங்களை எடுத்தியம்புகின்ற "இன்னியம்" என்கின்ற கலைப் படிமத்தின் காட்சியமைப்பு எல்லோரையும் வியக்கத்தக்க வகையில் அமைந் திருந்தது. தமிழ் மன்னனாகிய சங்கிலிய மன்னனின் காலத்தில் தோற்றம் பெற்ற இக்கலைப்படைப்பு புராதன காலத்தில் தமிழ் மன்னனைப் பறைசங்கு முழங்க கொடி கொம்பு ஆலவட்டத்துடன் வரவேற்று வலம் வரும் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. அவ்வாறான ஒரு நிகழ்ச்சி மார்கழி திங்கள் கலை நிகழ்ச்சியில் மங்காப் புகழுடன் எம்மக்களின் முதல்வர் அவர்களை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டமை தென்மராட்சிப் பாடசாலைகளில் இதுவே முதற்

தடவையாகும். இத் தமிழ் பண்பாட்டு வரவேற்பு நிகழ்வுக் குழுக்கள் ஏனைய பாடசாலைகளிலும் எதிர்வரும் காலங்களிலும் விருத்தி செய்ய வேண்டியவை இன்றியமையாத தாகின்றது.

மேற்குறித்த விடயங்களை பிரதிபலிக்கும் ஊர்திகளும் மாணவச் செல்வங்களின் கலை வெளிப்பாட்டு அம்சங்களும் முன்னே செல்ல முத்தான நிகழ்விற்கு முதன்மை விருந்தினராய் முழுமதிபோல் தோன்றி மறத்தமிழன் பெற்றெடுத்த மகத்துவமான எம்மண்ணின் முதல் மந்திரி பவனிவர அவர் தம் பரிவாரங்கள் விருந்தினர்களாய் புடைசூழவர தென்மராட்சியின் கல்விச் சமூகம் ஒன்றுகூடி அவர்களை வரவேற்கத் தமிழர் தம் பண்பாட்டின் அடையாள மாகிய பூரண நிறைகுடம் வைத்து வீதிகளில் மக்கள் விருப்புடனே வரவேற்ற அந்தக் கணப்பொழுதில் வணிகத்தில் பெயர் பெற்ற சேரியாம் சாவகச்சேரி பெருமை கண்டது.

தென்மராட்சியின் கலாசார மண்டபம் காலத்தின் பதிவின் வெளிப்பாடாக மண்டபம் நிறைந்த மக்கள் வெள்ளத்தைக் கொண்டிருந்ததை விருந்தினர் வரவேற்பு பறைசாற்றிற்று. வெளியக நிகழ்ச்சிகள் நிறைவுற மண்டப நிகழ்ச்சியில் தமிழர் தம் பாரம்பரியங்களில் ஒன்றாகிய பெண்தெய்வ வழிபாட்டை உணர்த்தும் வகையிலும் தாய்த் தெய்வமே ஆதாரம் என்பதற்கேற்ற வகையில் தமிழ் தாயை உருவகப்படுத்தி அதற்கு மாலையிட்டுக் கௌரவித்தமை மேற்படி விழாவை மெருகூட்டச் செய்ததுடன் புறநானூற்றின் புரிதல்களை எமக்கெடுத் தியம்பியது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் மங்கல இசை மதரீதியான பிரார்த்தனையுடன் ஆரம்ப நிகழ்ச்சிகள் மனம் நிறைந்த மங்கலத்துடன் ஆரம்ப மாகின. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் அலைமோதியது. அரங்க நிகழ்ச்சி யின் வரிசையிலே முழுநிலவை வரவேற்று தென்மராட்சிப் பாடசாலை ஆசிரியர் களின் நிலாப் பாட்டு நிகழ்ச்சியின் தார்ப்பரியத்தை மனம் கொள்ளச் செய்தது. தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் மிகவும் சிறப்பாகப் பல்பரிமாண ஆடற்கலையின் அற்புதத்தை மின்னொளியில் பார்த்தது போன்ற உணர்வுடன் அரங்கேறியமை அனைவர் உள்ளத்தையும் பூரிப்படையச் செய்தது.

தொடர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ் உணர்வுப் பாடலும் நிலாப் பாடலும் நினைவில் கொள்ளத்தக்கதாய் அமைந்திருந்தன.

ஆற்றலும் ஆளுமை மிக்க அருந்தவபாலன் அதிபரின் இரத்தினச் சுருக்கமாகச் சபையறிந்த வரவேற்பு வார்த்தை வரிகளுடன் ஆசிரியர்களின் மருதநிலக் கானம் இசைக்கொடையின் வெளிப்பாட்டு இனிமையைக் காட்டி நின்றது. அத்துடன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களின் அருகிப் போன ஆடற்கலையின் அற்புதத்தை பின்னல்கோலாட்டம் என்னும் வடிவில் பிரகாசிக்கச் செய்தமை பிரமாதமாய் அமைந்திருந்தது. தொடர்ந்து தன்னலம் கருதாப் பன்முக ஆற்றல் கொண்ட தென்மராட்சி வலயத்தினதும் நிகழ்ச்சியினதும் சீரிய தலைவர் திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்களின் தலைமையுரை நிகழ்ச்சியின் வெற்றியைக் கோடிட்டுக் காட்டி நின்றது. தொடர்ந்து எம்மில் அருகிவரும் ஓதல் கலை வெளிபாட்டின் ஓர் அம்சமாகிய புராண படனம் எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தது. மேலும் வளரும் பயிரை முளையில் தெரியும் என்பதற் கேற்றாற் போல் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி நேருஜாவின் பேச்சு சபையைக் கவர்ந்தது. மேலும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் மெல்லிசைப் பாடல் மனதை மெருகூட்டிச் சென்றது.

தொடர்ந்து எல்லோருடைய மனங்களையும் ஆனந்தத்தோடும் அழுகையோடும் கவரக்கூடிய விதத்தில் மாற்றுவலுவுள்ள மாணவி செல்வி கீர்த்தனாவின் பாடல் வரிகள் பார்வை இல்லாவிடினும் எதிர்காலம் ஒன்று நிச்சயம் உண்டு என்பதற்கான கட்டியமாய் அமைந்தது. அதற்கேற்ற வகையில் அம்மாணவியின் கலைத்துறைரீதியான உயர்கல்வி வரை உதவி வழங்க சித்தமாய் இருப்பதாக வடமாகாண சபையின் உறுப்பினர் திரு.கே.சயந்தன் அவர்கள் பிரகடனம் செய்தமை மார்கழித் திங்களின் மற்றுமோர் மாண்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. தொடர்ந்து கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களின் மேலைத்தேயப் பாணியினாலான ஓகன் இசை அவர்களின் இணைக் கலைத்திட்டத்தின் இயலுமையை வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டுதற்குரியது.

தொடர்ந்து நிகழ்ச்சியொழுங்கில் தென்மராட்சி மண்ணின் மைந்தன் மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களை அவரது ஆன்மீக அறிவியல் அரசியல் பொருளியல் பணிக்கான கௌரவிப்பு காலத்தின் கடமை ஒன்றாக அமைந்திருந்தது. தொடர்ந்து தென்மராட்சியின் நாட்டிய ஆசிரியைகளினால் நவரச நாயகிகளின் அரங்காற்றுகை அரங்கினை அமைதி கொள்ள வைத்தது.

ஆடற் கலையின் நவரசங்களாக மகிழ்ச்சி, வெறுப்பு, பயம், ஆச்சரியம், சிரிப்பு, வீரம், கோபம், சாந்தம், கருணை போன்ற படிமங்களை காட்டிச் சென்றமை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அதேபோன்று ஆசிரியர்களின் மெல்லிசைப் பாடல் மேடையை மெருகூட்டிச் சென்றது.

தொடர்ந்து மிருசுவில் அ.த.க பாடசாலை, யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவர்களின் கிராமிய கதம்பம் பல வர்ண நிறங்களில் கிராமியப் பண்பாட்டைப் பறைசாற்றும் வகையில் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளிக்கக் கூடிய வகையில் ஆற்றுகை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. சங்கீத ஆசிரியர்களின் சாஸ்திரிய இசை மண்டபத்தை மெருகூட்டியது. நிறைவு நிகழ்ச்சியாகிய மயானத்தின் மைந்தன் எனும் ஆசிரியர்களதும் மாணவர்களதும் நாடகம் மனம் கொள்ளத்தக்கவையாக அமைந்த போதும் நேர முகாமைத்துவத்தின் நீட்சி காரணமாக அவ்வளிக்கை அமைதியாகவே அரங்கை விட்டுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தத்தில் நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் சிறப்பாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் செயலூக்கம் உடையதாகவும் அமைந்திருந்தன. எனினும் சிற்சில குறைபாடுகள் ஒழுங்கமைப்பில் தோன்றி மறைந்தன என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக ஒலியமைப்பில் சற்று வறுமை நிலை இருந்தமை அவதானிக்கமுடிந்தது.

எது எவ்வாறிருப்பினும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் மார்கழித் திங்கள் நிகழ்ச்சியானது "மாதங்களில் அவள் மார்கழி மலர்களிலே அவள் மல்லிகை" என்னும் பாடல் வரிக்கேற்றவகையில் அமைந்திருந்தமை காலமும் எமக்கு கைகூடி இருந்தமையும் வலயக் கல்வி அலுவலகத்தின் பதவிநிலைசார் உத்தியோகத்தர்களினதும், பதவி நிலைசாரா உத்தியோத்தர்களினதும் அனைத்துப் பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பும் குறிப்பாக கலை நிகழ்ச்சி மற்றும் ஊர்தி ஒழுங்கமைப்பை அளிக்கை செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர் ஒட்டுமொத்த அர்ப்பணிப்பும் முதன்மை விருந்தினர் உட்பட ஏனைய விருந்தினர்களுடைய வருகையும் இவ்வெற்றிக்கு ஊன்றுகோலாக அமைந்திருந்தது என்றால் மிகையில்லை.❑

தென்மராட்சியின் பண்பாட்டைப் பிரதிபலித்த மார்கழித் திங்கள் முழுநிலாநாள் கலைவிழாவின் ஊர்திப் பவனி ஒரு பார்வை

திரு. க. க. ஈஸ்வரன்,
தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,
ஆசிரியர் மத்திய நிலையம் - வரணி
தென்மராட்சி கல்வி வலயம்.

மார்கழித் திங்கள் முழுநிலாநாளில் (16-12-2013) காலைவேளையில் தென்மராட்சியின் சாவகச்சேரி நகரம் விழாக்கோலம் பூண்டு புதுப்பொலிவு பெற்றிருந்தது. முழுநிலாவின் ஒளி முழுவதும் தென்மராட்சியை நோக்கியே வீசிய பிரமை எங்கும் பிரதிபலித்தது. தென்மராட்சியின் பெருந்திரளான மக்கள் வெள்ளம் அலைபாய, எல்லோரது கண்களும் A9 வீதியை நிறைத்திருக்க பிரதேச செயலகத்தின் முன்றிலிலிருந்து வரலாறு காணாத எழுச்சி மிக்க, பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற ஊர்திகள் பவனி துவங்குகின்றது.

ஆம், அன்று வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணை யுடன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா தென்மராட்சி கலாசார மன்ற மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. A9 வீதி, புகையிரத நிலைய வீதி என்பன அழகு பெற்றன. இல்லங்களின் வாயில்கள் தோறும் வீதியின் இரு மருங்கிலும் பூரண கும்பங்கள் வைத்து மக்கள் அனைவரும் நிலவுபோல் மலர்ந்த முகத்தில் புன்னகை தவழ வண்ணப் பட்டாடைகளுடன் ஆரத்திசெய்து வரவேற்று மகிழ்ந்திருக்கத் தென்மராட்சி மக்களின் கலை கலாசாரங்களை வெளிப்படுத்தும் மார்கழித் திங்கள் முழுநிலா நாள் நிகழ்ச்சிக்கான விருந்தினர்களை இன்னியம் இசை முழங்க, கோலாட்டம், கும்மி, செம்பு நடனம், ஒயிலாட்டம், அன்னவரிசை சகிதம் ஊர்வலமாக அழைத்துக் கொண்டு அணிவகுத்து முந்திவந்து கொண்டிருந்தன முழுநிலா ஊர்த்திகள்.

ஒரு பிரதேசத்தின் பண்பாட்டை வெளிக்கொண்டுவர அப்பிரதேச மக்கள் தம் எண்ணங்களைச் சித்திரமாக, ஓவியமாக வரைந்தோ, ஆற்றுகை செய்தோ, இசைமூலம் வெளிப்படுத்தியோ, நல்வாசகங்கள் மூலம் பிரதிபலித்தோ ஊர்வலம்

வந்து பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்துவது வழக்கம். இதனால் கிராமம் நகரத்தினுள்ளும் நகரம் கிராமத்தினுள்ளும் சங்கமிக்க வழியாகின்றது. தைப் பொங்கல், புதுவருடப் பிறப்பு போன்ற பண்டிகைக் காலங்களில் அப்பண்டிகை களின் நோக்கம், தேவை, பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்த இத்தகைய ஊர்த்திகள் அமைக்கப்பட்டன. சமய விசேட தினங்களிலும் சுவாமி ஊர்வலம், சூரசங்கார காலங்களில் ஊர்திகள் வெளிப்பட்டு மக்கள் மயப்படுவதுமுண்டு. இவையனைத்திற்கும் மேலாக மே தினத்தின் தொழிலாளர்களின் பல்வேறு சிந்தனைகளையும் வெளிப்படுத்தி எழுச்சியை ஏற்படுத்துவதற்கு ஊர்திகள் பவனி இடம்பெறும். அந்தவகையில் பண்பாட்டைப் பிரதிபலித்த முழுநிலாநாள் கலைவிழாவை எழுச்சி மிக்கதாக ஆக்கியவையே தென்மராட்சியில் பாடசாலை கள் மற்றும் இலக்கிய மன்றங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்திப் பவனியாகும்.

ஊர்திப் பவனிக்குத் தலைமை தாங்கியது தென்மராட்சி இலக்கிய அணியினரின் சங்கத் தமிழ்ப் பண்பாட்டு ஊர்தி. மாட்டுவண்டியில் கிராமிய மணம்கமழ அதியமானுக்குக் கிடைத்த அருமருந்தன்ன நெல்லிக்கனியைத் தமிழ்ப்பெரும்புலவர் ஔவைப்பிராட்டிக்குக் கொடுத்துத் தமிழைக்காத்த இலக்கியச் செய்தியைப் பறைசாற்றி மீண்டும் ஒரு இலக்கியப் புரட்சிக்கு வித்திட்டுச் சென்றது அவ்வூர்தி. ஔவையும் அதியமானும் கலைத்துவம் மிக்க படைப்பாக அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். மாட்டுவண்டியை மறந்து இரும்புக் குதிரைகளில் பறந்துதிரிகின்ற இளஞ்சந்ததிக்கு எரிபொருட் செலவற்ற மாண்டுவண்டி ஒரு மீள்ஞாபகமூட்டலாய் முந்திவந்து பெருமை சேர்த்தது.

கச்சாய்ப் பிரதேச பாடசாலைகளின் ஒன்றிணைந்த படைப்பு வள்ளப் பொங்கல் ஊர்தி. நெய்தல் நிலப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இவ்வூர்தி ஓர் அற்புதமான படைப்பு ஆகும். "இயற்கையே எம் இருப்பு இணைந்து வாழ்வதே நம் பொறுப்பு", "வல்லமையும் வலிமையுமே வாழ்வியலை மேம்படுத் தும்", "எழுத்தறிவே எழுச்சியின் வடிவம் எண்ணறிவே ஏற்றத்தின் வடிவம்" போன்ற எழுத்தோவியங்களைத் தாங்கிச் சிந்திக்க வைத்தது வள்ளப்பொங்கல் ஊர்தி. அலைகடலை வென்று திரவியங்கள் கொண்டு வந்து குவிக்கும் அற்புதத்தை முழுநிலா நாளில் கச்சாய்ப் பாடசாலைச் சமூகம் வெளிப்படுத்தி நின்றது.

மார்கழித்திங்கள் முழுநிலா நாள் கலைவிழாவின் ஊர்திப் பவனி படங்களின் தொகுப்பு

இன்னியமும் கலை ஆற்றுகைகளும்

தென்மராட்சி இலக்கிய அணியின்
ஒளவைக்கு நெல்லிக்கனி ஈய்ந்த
வள்ளல் அதியமான்



யா/கச்சாய் அ.த.க.பாடசாலையின்
வள்ளப் பொங்கல்

கற்பக விருக்ஷமாய்த் திகழும் பனைமரத்தை வடமாகாணத்தின் தனித்துவ வளத்தைத் தாங்கியதாய் யா/வரணி மத்திய கல்லூரியின் ஊர்திப் பவனி திகழ்ந்தது. பனைமரத்தின் பயன்களை மறந்துவிட்ட எமக்கு மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தது இவ்வூர்திப் பவனி. "இயற்கையை இயற்கையால் வெல்லலாம்" என்ற வாக்குக்கு இணங்க மருந்தாக, மழைக்குக் குடையாக, வெய்யிலுக்குத் தலைக்கவசமாக, சுமக்கக் கடகமாக, படுக்கப் பாயாக, வீட்டுக்குக் கூரையாக, குடிக்க நல்ல பதநீராக, பணப்பையாக, பொருட்பையாக, எழுத நல்ல ஏடாக . . . அப்பப்பா எத்தனை பயன்கள். அத்தனையும் இந்தப் பனையுள் அடங்கியிருக்கிறதே. அத்தனைய வளத்தின் பெருமையை முழுநிலா நாளுக்காக ஊர்திப் பவனியாக ஆடல் பாடலோடு சித்திரித்த பாடசாலைச் சமூகத்தைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

"இந்துவாய் வாழ்ந்து இனியன செய்து ஆன்மீக வாழ்வில் ஆனந்தமடைவோம்" எனும் வாசகம் தாங்கி யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஊர்திப் பவனி தொடர்ந்தது. மார்கழி மாதம் பிறந்துவிட்டால் எங்கும் திருவெம்பாவை ஒலிகளும் பாவை நோன்பும் மாதத்தையே புனித மாக்கிவிடும். அதிகாலையில் துயிலெழுந்த இளம்பெண்கள் தம்தோழியரைத் துயிலெழுப்பி புனித நீர்த்துறையில் நீராடி ஈசனைத்தொழுதால் நினைத்த நல்ல மணாளன் அமைவான் என்பது அக்கால நம்பிக்கை இன்று அருகிவிட்ட போதிலும், அவ்வக் காலங்களில் விரதங்களும் நோன்புகளும் நிகழ்ந்து கொண்டுதான் வருகின்றன. கிராமப்புறங்களில் மணிவாசகரின் திருவெம்பாவை யைப் படிப்பதும் பயன் சொல்வதும் இன்றும் பக்தியோடு நடைபெற்று வருகின்றன. அந்தப் பக்திப் பரவசத்தை முழுநிலாநாள் கலை விழாவுக்காக ஊர்தியாக அமைத்துத் தந்த கல்லூரிச் சமூகத்தை வாழ்த்துகின்றோம்.

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற வள்ளுவன் வாக்கைச் சிரமேற் கொண்டு விவசாய சமூகப் பண்பாடுகளை "ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை..." என்ற இனிய பாடலுக்கு அபிநயம் செய்துகொண்டு தொடர்ந்தது யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய ஊர்தி. மாணவர்கள் கலை இனிமை காட்டத் தொடர்ந்த அவ்வூர்தி ஏற்றமிறைக்கும் பண்டைய முறையான துலாமிதித்தலை மையப்பொருளாகக் கொண்டு அமைந்து முழுநிலா நாளை முழுமைப்படுத்தியது.

அக்காலத்தில் சமூகத்தை நிலைநிறுத்துவதில் தனியுரிமை பெற்றுத் திகழ்ந்தவர்கள் உழவரும் புலவருமாவார். சங்ககாலப் புலவர்களே, புலவர்களில் தலையாயவர்கள். அவர்களை இன்றும் நினைவுபடுத்த அவர்களைப் போல் வேடமணிந்து ஊர்தியில் பவனி வந்தவர்கள். யா/சந்திரமௌலீச வித்தியாலய மாணவர்கள். முழுநிலா நாளில் முழுமதியான புலவர்களை எம் மனக்கண் முன்நிறுத்தி அவர் புலமையிற் பிறந்த கவி வரிகளை இசைகூட்டி மெருகூட்டிச் செவிக்கினிமை தந்த அவ்வூர்திப் பவனி சிறந்ததோர் படைப்பாகும்.

மடைதிறந்த வெள்ளமென மக்கள் கூட்டம் அணிதிரண்டிருக்க தென்மராட்சி மண்ணின் கலை கலாசாரங்களையும் இலக்கியச் சித்திரிப்புக் களையும் பண்பாட்டு விழுமியங்களையும் விளம்பி நின்ற ஊர்திகளின் பவனியை பார்க்கக்கிடைக்காத கண்கள் கண்களே அல்ல என்று ஆன்றோர் வியந்து நிற்க, தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலாநாள் கலைவிழாவின் ஊர்திப் பவனி A9 வீதி வழியாகப் பவனி வந்து புகையிரத நிலைய வீதியால் தென்மராட்சிக் கலாசார மண்டபத்தை அடைந்தது.

"வண்ணநிலா வட்டநிலா முத்துநிலா
சிவனார் சிரசில் இட்டநிலா
பொட்டுநிலா சிட்டுக்கள் தாம்
விளையாட மனக்கரத்தால் தொட்டநிலா
கவிஞர் மனதில் வலம் வந்த நிலா
ஆம்ஸ்றோங் முத்தம் இட்டநிலா
இது மார்கழித்திங்களில் மொட்டு விட்டநிலா
தென்மராட்சியின் முழுநிலாக் கலைவிழா"❑

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் பாரம்பரிய விவசாயம்

யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலத்தின் சங்கப்புலவர்கள்

யா/வரணி மத்திய கல்லூரியின்
பனைவளத்தின் பயன்கள்

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின்
திருவெம்பாவை

தமிழர் மரபில் 'இன்னியம்' ஒரு கண்ணோட்டம்

திரு. க. குணரத்தினம்,
ஆசிரியர்,
யா/உசன் இராமநாதன் ம.வி.

'இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது
இறைவன் கொடுத்த வரமாகும்"

என்பது போல் இறைவன் எமக்களித்த இசைக்கலை தமிழரின் வாழ்வியலுடன் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருப்பதை வரலாறு ஆதாரங்களுடன் பதிவு செய்துள்ளது. அந்த இசைமரபுடன் வந்ததுதான் தமிழ் "இன்னியம்". இன்னியம் என்றால் (இன் + இயம் இன் - இனிமை, இயம் - இசைதரும் கருவி, வாத்தியம்) இசை வாத்தியங்களின் சங்கமத்தைக் குறிக்கின்றது. அதாவது, பல இசைக்கருவிகளை ஒன்றாக இசைத்தல் 'இன்னியம்' அல்லது இன்னிய அணிக்குழு (Group of Tamil Band) என அழைக்கப்படுகின்றது.

இன்னியம் பற்றி இலக்கிய ஆதாரங்களோடு பார்க்கின்றபோது சங்க காலத்திலேயே இசையும் கூத்தும் வல்ல பாணர், விறலியர் போன்றோர் பண்ணும் தாளமுங் கூடிய இசைப்பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள், தாளவிசைக் கருவிகள் ஆகியவற்றின் துணைகொண்டு சிறப்பாகப் பாடியுள்ளார். யாழ், கின்னரம், குழல், சங்கு, தூம்பு, வயிர், தண்ணுமை, முழவு, முரசு, பறை, கிணை, துடி, தடாரி, பாண்டில் முதலான இசைக்கருவிகளை ஆரம்ப காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். இதற்குச் சங்க இலக்கியங்களே சான்று பகர்கின்றன. "கூடுகொள் இன்னியம் கறங்க" எனப் புறநானூறு கூறுகின்றது. அதாவது, கூட்டாக முழங்குகின்ற அல்லது ஒலிக்கின்ற வாத்திய இசையை இது குறிக்கின்றது. இதேபோல் "அரிகூட்டு இன்னியம் கறங்க" (611 - 612) என இன்னிய வாத்திய இசை பற்றி மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையிலும் அரங்கேற்ற ஊர்வலத்தில் இடம்பெற்ற இசைக்கருவிகள் பற்றிக் கூறப்படுகின்றது. முளரி யாழ், சுருதிவீணை, பரிசாத வீணை, சதுர்தண்டி வீணை போன்றவற்றை வரிசைப்

படுத்திக் கூறுகின்றது. அந்தவகையில் ஊர்வலங்கள், வீதிப் பவனிகள் என்பவற்றின்போது இன்னிய வாத்தியக் குழுவினர் இசை வாத்தியங்களை இசைத்துச் சென்றனர் என்பதை அறிய முடிகின்றது. பல்வேறுபட்ட தந்தி, வாத்தியங்கள், துணை வாத்தியங்கள், தோல் வாத்தியங்கள், கஞ்ச வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள் என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இதில் ஒரே வாத்திய இசையும் இருந்துள்ளது. அதேவேளை கூட்டு வாத்திய இசையும் இருந்துள்ளது.

இன்னிய வாத்தியக் குழு கால ஓட்டத்தில் கரைந்து போகாது காலத்தின் போக்கிற்கிணங்க மாறுதல்களையும் உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சி கண்டது. ஆரம்பத்தில் பறை, துடி போன்ற தோல் வாத்தியங்களையும் யாழ், வீணை போன்ற தந்தி வாத்தியங்களையும் பயன்படுத்தினர். பின்னர் சங்கு, குழல் போன்ற துளை வாத்தியங்களும் தாளம், சேமக்கலம் போன்ற கஞ்ச வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சிக்காலம் பக்தி நெறிக்காலமாக மிளிர்வதற்கு சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை எழுச்சி பெறச் செய்தனர். இங்கு இறைவனை மெய்யுருகிப் பாடிப்பரவி தலங்கள் தோறும் யாத்திரை செய்து அற்புதங்களை நிகழ்த்திச் சமயப் பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்லும்போது இவர்களுடன் வாத்திய இசைக்குழுவினரும் சென்று அடியார் கூட்டத்தோடு வழிபாடுகள் செய்திருக் கின்றனர். மணிவாசகர் பாடிய திருவாசகம் - திருப்பள்ளியெழுச்சியில் "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் . . ." என வரும்பாடல் இதனை உறுதிப்படுத்துகின்றது.

மணிவாசகர் திருவாசகம் - திருப்படையாட்சியில் இன்னியம் பற்றியே குறிப்பிட்டுள்ளார். திருப்படையாட்சி ஆறாம் பாடலில்,

"பொன்னியல் உன்திருமேனி வெண்ணீறு பொலிந்திடுமாகாதே

.....

இன்னியம் எங்கும் நிறைந்து இனிதாக இயம்பிடுமாகாதே"

என்ற பாடல் குறிப்பிடத்தக்கது. இங்கு திருப்படை என்பது தொண்டர் அல்லது அடியார் கூட்டத்தைக் குறிக்கின்றார். ஆட்சி

என்பது ஆன்மாவின் பாசம் கழுவப்பட்டு அருள்பெறும் நிலை. அடியார்கள் தமது பாச வினையறுத்து ஈசன் கழல் சேர இன்னிய இசையை நிகழ்த்திப் பாடிப் பரவியதை மணிவாசகர் தத்துவ ரூபமாகக் காண்பிக்கின்றார். இதேபாடலில் "வீணை முரன்றெழும் ஓசையிலின்பம் மிகுந்திடுமாகாதே" என்றும் எட்டாவது பாடலில் "சங்கு திரண்டு முரன்றெழுமோசை தழைப்பன வாகாதே" என்றும் பாடியுள்ளமை இன்னிய வாத்தியங்களில் வீணையொலி, சங்கொலி என்பவற்றைச் சீர்தூக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது. இன்னியம் பல்லவர் பக்தி இயக்கத்தின் எழுச்சிச் சின்னமாக இருந்துள்ளது. இன்னிய இசை முழங்க இன்றமிழ்ப் பாடல்களை மெய்யுருகிப் பாடியே பக்தி நெறியைப் பரப்பியுள்ளனர். அதுமட்டுமல்ல இறைவனையே இசை வடிவினனாகவும் போற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடாரம் வென்ற சோழன் கன்னித் தமிழ் நாட்டில் கோலோச்சுங் காலத்தில் கவின் கலைகள் தெய்வீகக் கலைகளாகப் போற்றப்பட்டதோடு கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டார்கள். ஆலயங்களை மையமாகக் கொண்டே கலைகள் வளர்ச்சி கண்டது. சுவாமி ஊர்வலம் (வீதிப்பவனி) வரும்போது நடன மாதர்கள் நடனமாட சகல வாத்தியங்களும் முழங்கின என வரலாறு சான்று பகர்கின்றது. சோழர் காலக் காப்பியங்களில் ஒன்றான கந்த புராணம் இன்னியம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

"இன்னிய தேர்தரு இந்திரன் முதலாம்
மன்னிய வானவர் மற்றுளர் யாவரும்
துன்னினர் ஆயிடை சூழ்ந்துறை செயலால்
பொன்னகரென்று புகன்றி டலாமால்"

(கந்தபுராணம் - திருநகரப்படலம்)

இவற்றிலிருந்து இக் காலத்தில் அரசர்கள் நகர் வலம் வருகின்ற போது சீர்வரிசைப் பொருட்களுடன் இன்னியமும் இசைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

இன்னிய அணியின் பரிணாம வளர்ச்சிக்கேற்ப அணியில் வாத்தியங்கள் அதிகரிக்கத் தொடங்கின. மரபு வழிப்பட்ட பெரும்பறை, சிறுபறை, தம்பட்டை, மேளம், உடுக்கு, மத்தளம், நாதசுரம், சொர்னாளி, புல்லாங்குழல், சிறுதாளம்,

பெருந்தாளம், மிருதங்கம், சங்கு, எக்காளம், சிலம்பு, சேகண்டி, அம்மனைக்காய், சவணிக்கை, மணி, கழிகம்பு, கொம்பு உள்ளிட்ட வாத்தியங்களையும் ஒருங்கிணைத்து இன்னிய அணி இருந்துள்ளது. இலக்கணையார் இலம்பகம் (2378 அலங்கல்) இன்னியம் பற்றிக் கூறுகையில்,

"முழங்கின இன்னியம் மொய்த்தது ஏத்தொலி
கொழுங்கயல் கண்ணினார் கொண்டு பொன் அகல்
இழிந்தனர் திருமயிர் ஏற்ப நீரதில்
நிழற்றன சாமரை நிரை சங்கு ஆர்த்தவே"

என்கிறது. இதில், இன்னியம் முழங்கும்போது ஏற்றிப்போற்றும் வாழ்த்தொலிகள் நெருங்கின. அப்போது கயன்போன்ற கண்ணினை உடைய வர்கள் சீர்வரிசை செய்ய சாமரை நிழல் செய்ய சங்கு முழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அரசர்களையும் இன்னும் மரியாதைக்குரியவர் களையும் சீர்வரிசைகளோடு கட்டியம் கூறி இன்னிய அணியுடன் அழைத்துச் செல்வதை இப்பாடல் கோடிட்டுக் காட்டுகின்றது.

இன்னிய அணியில் வாத்தியங்கள் வரையறை செய்யப்படவில்லை. தமிழரின் மரபுசார் வாத்தியங்களை வசதிக்கேற்ப பயன்படுத்தியுள்ளனர். பின்னர் சீர்வரிசைப் பொருட்களாக கொடி, ஆலவட்டம் என்பவற்றைத் தாங்கிக் கொண்டு தமிழரின் பாரம்பரிய உடைகளை அணிந்துகொண்டு ஆடிப்பாடி நகர்வதாக இவ்வின்னிய அணி இருந்ததை தமிழரின் மரபியலை நன்கு அறிந்த சான்றோர்கள் நிறுவியுள்ளனர்.

இலங்கைத் தீவில் இன்னியக் கலையை அறிமுகஞ்செய்து பாரம்பரிய கலை வடிவங்களுக்குப் புத்துயிர் அளித்து வருபவர்களில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் முதன்மையானவர். இவர் 1998-ம் ஆண்டு இதே பல்கலைக் கழகத்தில் 'இன்னிய அணி' ஒன்றை உருவாக்கி காலந்தோறும் புடம்போட்டு வளர்த்தெடுத்து ஆண்டுதோறும் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் இன்னிய அணியையே பவனியில் இடம்பெறச் செய்துள்ளார். பேராசிரியர் அவர்கள் இதுபற்றி வீரகேசரி இதழுக்கு வழங்கிய செவ்வியில் "இந்த இன்னிய அணியில் தமிழரது பாரம்பரிய மண் வாசனை மணக்க வேண்டும் என நாம் விரும்பினோம். அன்று வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு உருவாக்கிய

இன்னிய அணியில் வரும் சர்வாணியும் தொப்பியும் எமக்குரியதல்ல. அவை வட இந்தியச் சாயலும், ஆங்கிலச் சாயலும் பொருந்தியவை, நாம் தமிழரின் பாரம்பரிய உடையைத் தேடினோம். அந்நியக் கலாசாரம் ஏற்படுமுன் நம்மவர் என்ன உடை அணிந்திருந்தனர்? நமக்கு ஒரு பழைய (1905-ம் ஆண்டு காலப்பகுதி) படம் கிடைத்தது. அதில் அதிகாரியும் (போடியார்) மனைவியும் இருந்தனர். அந்த உடையினையும் உடுக்கும் பாங்கினையும் தலைப்பாகை யினையும் சற்று நவீன முறைப்படி அமைத்தோம்.

ஆபரணங்களும் அந்தப் படத்தில் உள்ளவாறே போடியார், மனைவி, மகள் அணிந்திருந்த மணிகளினாலான மாலைகள், கையிலே கட்டும் தாயத்து, கைகளில் கடகம், காதுகளுக்குக் கடுக்கன் இவற்றை நாம் கிடைத்த சின்னக் காய்களைக் கொண்டு செய்தோம். கடையில் வாங்கினோம்.

இந்த இன்னிய அணி 1997 இல் ஆரம்பத்தில் மரபுவழி அண்ணாவிமார் பத்துப்பேரைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அவர்கள் அன்று மத்தளம் மாத்திரமே பாவித்தனர். "ததித்துளாதக தகிங்கிண திமிதக தாதெய்யத் தாதோம்" என்ற தென்மோடித் தாளக் கட்டை அடித்தபடி அவர்கள் ஊர்வலத்தின் பின்னால் வந்தனர். 1998 இல் மாணவர்களை மாத்திரம் கொண்ட அணியாக பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவுக்குப் பாவிக்கப்பட்டது. 1999, 2000 ஆண்டுகளில் மேலும் பல ஆட்டங்கள் புகுத்தப்பட்டன. 'தகதகதக திகுதிகுதிகு தனாங்கு தித்தக தக ததிங்கிணதோம்' என்றதும் தந்தக் தகிர்த்த திந்தக் திகிர்தத் திகிர்தத் தெய்" என்ற தாளக்கட்டுக்களும் வீசாணம், பொடியடி, நடை போன்ற வடமோடி ஆட்டக் கோலங்களும் புகுத்தப்பட்டன. நீண்டதொரு ஊர்வலத்தில் செல்லும் இவர்கள் வடமோடி, தென்மோடிக் கூத்தர்போல கைகளை அசைத்துக் கொண்டும், நடந்து கொண்டும், நடந்து ஆடிக் கொண்டும் செல்வார்கள். 2002-ம் ஆண்டில் இன்னும் சில ஆட்ட நுட்பங்களை இணைத்தோம். கூத்தர் போல சிலருக்கு முழங்காலிலிருந்து புறங்கால் வரை சதங்கைகளும் அணிந்தோம் ஒவ்வொரு வருடமும் ஒரு சிறு முன்னேற்றம் பின்னாளில் கொடி, ஆலவட்டம் எல்லாம் இதில் இணைத்துக்கொண்டோம். இன்று பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் ஈழத்தமிழருள் சாதாரண மக்கள் மத்தியில் பயில் நிலையில் உள்ள வாத்தியங்களாகும். தவில், நாதசுரம், வயலின், புல்லாங்குழல் என்பன சாஸ்திரீய சங்கீதத்துக்குப் பாவிக்கப்படுகின்றன.

பரத நாட்டியத்தில் அடவுகளும், ஜதிகளும், ஆடல் முறைகளும் உள்ளன. இவற்றையும் அதனுடன் இணைக்கும்போது தான் இவ்வின்னிய அணி முழுமை பெறும்" என்றவாறு பேராசிரியர் அவர்களின் இன்னியம் பற்றிய செவ்வி விரிந்து செல்கிறது.

பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களின் நெறியாள்கையில் உருவாக இவ்வின்னிய அணி கிழக்கு மாகாணத்தில் பவனிவந்தபோது கலந்துகொண்ட மூவினத்தவர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. அத்தோடு பாரம்பரிய கலை வடிவம் ஒன்றைப் பட்டம் தீட்டிப் பிரகாசிக்கச் செய்தமையால் பாராட்டினையும் பெற்றார். இதுவே, பின்னர் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்ப் பாடசாலை களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 2002-ம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் வன்னியிலும் பாடசாலைகளில் இவ்வின்னிய அணிகள் உருவாக்கப்பட்டு நிகழ்ச்சிகளின்போது பவனிவந்தன. வன்னியில் அன்றைய சமகாலத்தில் இருந்த கலைபண்பாட்டுக் கழகம், நுண்கலைப்பிரிவு என்பவற்றின் நெறியாள்கை யில் இன்னிய அணி இருந்தமையைக் காலம் பதிவுசெய்துள்ளது.

தற்போது, இன்னிய வாத்தியக் குழு தமிழ் மாவட்டங்களிலுள்ள குறிப்பாக வடக்குக் கிழக்கில் உள்ள பாடசாலைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. சில முன்னணிப் பாடசாலைகளில் விழாக்கள், நிகழ்ச்சிகளின் போது மரியாதை அணி வகுப்பில் 'பான்ட்' (Band) வாத்தியத்திற்குப் பதிலாக இன்னிய அணியைப் பயன்படுத்தி வருகின்றனர். இன்றைய இன்னிய அணியில் ஹாமோனியமும் இணைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

எனவே, இன்னியத்துக்கான வாத்திய வகுதி இன்னும் வரையறை செய்ய வில்லை. வசதிக்கேற்ப தமிழ் மரபுசார் வாத்தியங்களைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய இன்னிய அணி வகுப்பில் எல்லா வாத்தியங்களும் ஒரே தாளக் கட்டை அடியொற்றி இசைக்கப்படுகின்றன. அணியின் முன்னே இருவர் ஆடிவர பின்னால் வாத்தியக்குழு தாள அசைவோடு முன்னகர்ந்து செல்லும். இசைமூலம் சமிக்ஞைகளை வழங்குவது சங்கு வாத்தியமாகும்.

சங்கு வாத்தியத்தைத் தொடர்ந்து கொம்பு பின்னர் அபிநய ஆட்டம், இது பரத அடவுகளை ஒத்திருக்கும் அதன்பின்னர் ஏனைய வாத்தியங்கள் இசைக்கப் படுகின்றது. கொடி ஆலவட்டம் தாங்கி வருபவர்களும் தாள அசைவு களுக்கேற்பவே முன்னகர்ந்து செல்வர்.

எமது தென்மராட்சி வலயத்தில் இன்னிய அணி முதல் தடவையாக யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்களின் ஆலோசனைப் படி 'உலக தரிசனம்' (World Vision) நிறுவனம்' இதற்கான நிதியை வழங்கியிருந்தது. தென்மராட்சி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர். மற்றும் கலைத்துறை முதன்மையாசிரியர்களின் நெறியாள்கையில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபரின் வழிகாட்ட லிலும் சங்கீத மற்றும் நாட்டியத்துறை ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டு தென்மராட்சி வலயத்தின் "மார்கழித் திங்கள் முழுநிலா" நிகழ்ச்சியின்போது முதன்முறையாகப் பவனிவந்தது. தமிழ் மரபுசார் இசைவாத்திய அணி அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரையும் மெய்குளிர வைத்துள் ளது. மறுபுறம் இமயத்தைத் தொட்டு நிற்கும் இன்றைய நவீன தொழிநுட்ப யுகத்திலே பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து அவற்றைப் பட்டைதீட்டி ஒளிரச் செய்து இளைய தலைமுறைக்கும் பாரம்பரியங்களை மறந்து வாழ்பவர்களுக்கும் சமர்ப்பணமாகியுள்ளது என்பதே தமிழையும் தமிழ் மரபுகளையும் கலைகளை யும் நேசிக்கின்றவர்களின் மனப்பதிவாக உள்ளது.

"கலையின்பமே நிலையின்பம் என்றும், இசையால் வசமாகா இதயமேது இறைவனே இசை வடிவம்" என்றும் முன்னோர் பாடியதில் அர்த்தங்கள் உண்டு. தமிழர் சால்பிலே இசைபிறப்போடு கூடி வந்தது. இதனைக் கட்டிக் காத்த முன்னோர்கள் இறைவனிடம் கேட்டுப் பெற்றனர். ஔவையார் "சங்கத் தமிழ் மூன்றுந்தா" என முத்தமிழ்க் கலைகளையும் வேண்டினார். கம்பன் "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை.." என அறுபத்து நான்கு கலைகளையும் வேண்டினான். இவை தமிழர் மரபிலே கலைகளை எத்துணை பாடுபட்டு கட்டிக்காத்தனர் என்பதை திட்டவட்டமாகக் கூறுகின்றன.

"கரும்பு இருக்க இரும்பைக் கவர்வது போல இன்றைய இளஞ்சந்ததி மரபுசார் இசைகளைப் புறந்தள்ளி நவீன மேலைத்தேய இசைகளை அள்ளிப் பருகி வெறியாடுகின்றது. தன் இன அடையாளத்துடனும் மரபு சார்ந்தும் விளங்கும் தொன்மக் கலைகள் கையறு நிலையில் போவதை எள்ளளவும் நினைக்கவில்லை என்பது வேதனைக்குரியதே. மங்கல வாத்திய இசை களுக்குப் பதிலாக இன்று மேலைத்தேய 'பான்ட்' (Band) வாத்தியம் பயன் படுத்தப்படுகின்றது. மரண வீடுகளில் ஒலித்த பறை வாத்தியத்திற்குப் பதிலாக 'பான்ட்' வாத்தியமே பயன்படுத்துகின்றனர். மரபுசார் கலைத்தடங்களுக்குச் சாவுமணியடிக்கும் கைங்கரியங்களில் இளஞ்சமுதாயம் இறங்கியுள்ளது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; காலவகை யினானே" என்பது சான்றோர் கூற்று. ஆயினும் எமது இருப்பையும் தனித்துவங்களை யும் இன அடையாளங்களையும் விற்பதற்கோ புதைப்பதற்கோ அன்றி சிதைப்பதற்கு எவருக்கும் அருகதை கிடையாது. காலாதிகாலமாகத் தடம்பற்றி வந்த கலைகளை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்காமல் அடியோடு அழித்தோம் என்ற வரலாற்றுத் துரோகத்தை நாம் செய்யத் துணிந்தால் வரலாறு எம்மை மன்னிக்காது என்ற எதிர்கால நிதர்சனத்தை வரித்துக்கொண்டு எல்லோரும் செயற்படுவோமாக.❑

இன்னியத்தில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய வாத்தியங்கள்

திருமதி புனிதகுமாரி சுழநேசன்
முதன்மை ஆசிரியர் (சங்கீதம்),
தென்மராட்சி கல்வி வலயம்.

வரவேற்பு வைபவங்களில் வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவிற்கு மாற்றீடாக தமிழ்க் கலாசார பாரம்பரிய ரீதியில் அமைந்த வாத்தியக் குழுவையே இன்னியம் என்கிறோம். இன்னியம் என்ற சொல்லை இன் - இனிமை, இயம் - இசைதரும் எனப் பொருள்படப் பிரிக்கலாம். ஆகையால் இன்னியம் என்பதன் பொருளை இசை தரும் கருவி வாத்தியம் எனக் கொள்ளலாம். இக்கருவி வாத்தியங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகின்றது.

இன்னியத்தில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய வாத்தியங்கள்

எக்காளம்

எக்காளம் என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளில் ஒன்றாகும். இது நான்கு பித்தளை அல்லது தாமிரக் குழாய்கள் சேர்ந்து வாய் வைத்து ஊதும் துளையுடன் கூடிய இசைக்கருவி ஆகும்.

எக்காளம் ஊதுவது வெற்றியின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. பழங்காலத்தில் பகையரசரை வென்ற மன்னவர் எக்காளம் இசைத்து மகிழ்வர். ஆலய வழிபாட்டு ஊர்வலங்களிலும் இது இசைக்கப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாட்டின் சாமியாடுதல் அல்லது அருள் ஏறுதல் நிகழ்வில் உடுக்கை மற்றும் எக்கள இசையின் பங்கு முக்கியமானது.

கொம்பு

கொம்பு எனப்படுவது ஒரு வகை தமிழர் இசைக்கருவி ஆகும். இது ஒரு ஊது கருவி. நாட்டுப்புற இசையிலும், கோவில் இசையிலும் கொம்பு இசைக்கருவி பயன்படுகின்றது. கொம்பு இசைக்கருவி பண்டைக் காலத்தில்

விலங்குகளின் கொம்புகளைப் பயன்படுத்தியும் பின்னர் மூங்கிலாலும் உருவாக்கப்பட்டதாயினும், தற்காலத்தில் உலோகத்தால் உருவாக்கப் படுகின்றது.

சங்கு

சங்கு என்பது ஒரு காற்று இசைக்கருவி. தமிழர் மற்றும் இந்திய இசையில் பண்பாட்டிலும் கோவில் வழிபாட்டின் போதும் பயன்படுகின்றது. இந்து சமயத்தில் வைணவக் கடவுளான விஷ்ணுவின் சின்னமாக சித்திரிக்கப் படுகிறது.

நாதசுவரம்

நாதஸ்வரம் துளைக்கருவி (Aero phones) வகையைச் சேர்ந்த ஒரு கருவியாகும். இது நாதஸ்வரம், நாதசுரம், நாகஸ்வரம், நாயனம் என்ற பல வாறு அழைக்கப்படுவது உண்டு. சிறப்பாகத் தென்னிந்தியாவிலும் இலங்கை யிலும் தென்னிந்திய இனத்தவர் இலங்கைத் தமிழர் வாழும் உலகின் பிற பகுதிகளிலும் இந்த இசைக்கருவி வழக்கில் உள்ளது. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. வெகுதூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தைத் தரும் இயல்பினைக் கொண்டது.

ஐம்முக முழவம்

பஞ்சமுக வாத்தியம் எனும் ஐம்முக முழவம் வடிவத்தில் மிகவும் பெரிய தோலிசைக்கருவி ஆகும். குடாமுழா, குடபஞ்சமுகி என்று இதற்கு பல பெயர்கள் உண்டு. தமிழ்நாட்டில் சில பெருங்கோவில்களில் மட்டும் இந்த இசைக்கருவி இசைக்கப்படுகின்றது. திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய தலங்களில் இன்றும் பஞ்சமுக வாத்தியம் இசைக்கப்படுகிறது.

திருச்சின்னம்

திருச்சின்னம் என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளில் ஒன்றாகும். இது ஒரு காற்று வாத்தியம் ஆகும். இது ஜோடிக் குழாய்களால் ஆனது. இந்த இசைக்கருவி தாஸரிகளால் ஆலய வழிபாட்டின்போது இசைக்கப்படுகின்றது.

நகரா

நகரா என்பது ஒரு தோல் இசைக்கருவியாகும். மிகப்பெரிய வடிவம் கொண்ட இந்த இசைக்கருவி பெரும்பாலும் கோவில்களின் நுழைவாயில் அருகே இடம்பெற்றிருக்கும்.

தம்பட்டம்

தம்பட்டம் என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளில் ஒன்றாகும். இதன் ஒரு பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும். "டண் டண்" என்று கேட்கும் படியாக கிராம தேவதைகளின் திருவிழாக்களில் ஓர் இனத்தார் இத் தம்பட்டங்களை வாசிப்பதைக் காணலாம்.

தவண்டை

இது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக் கருவிகளில் உடுக்கை ரூபத்தில் உள்ள பெரிய தாளக் கருவியே தவண்டை ஆகும். வழக்கமாக மாரியம்மன் கோவில்களில் இந்த இசைக்கருவி வாசிக்கப் படுவதைக் காணலாம். தவண்டை குச்சியால் அடித்து வாசிக்கப்படுகின்றது.

தாரை

தாரை எனப்படுவது 12 அடி வரையான நீளத்தைக் கொண்ட ஒரு பழந்தமிழ் ஊதுகருவி. பல்வேறு சடங்குகளில் இக்கருவி பயன்படுத்தப்படுகிறது. இக்கருவி இடைநிக்காத இசை தருவது.

கஞ்சிரா

கஞ்சிரா சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். பஜனைகளில் கிராமிய மக்களால் பயன்படுத்தப்படும் வாத்தியம் இதுவாகும்.

பேரிகை

பேரிகை என்பது தகவல் தெரிவிக்கப்பயன்பட்ட ஓர் இசைக்கருவி யாகும். இந்த இசைக்கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அரசனுடைய கட்டளைச் செய்தி, திருமணச் செய்தி, ஊர்வலம் முதலிய தகவல்களை நகரில் இருப்பவர்களுக்கு அறிவிக்க இந்த இசைக் கருவியைப் பயன்படுத்தியிருக்கின்றனர். அலங்கரிக்கப்பட்ட

யானையின் முதுகில் பேரிகையை வைத்து முழக்குவர். அதன்பின்பு சொல்ல வேண்டிய தகவல் தெரிவிக்கப்படும். இப்படி அறிவிப்பவர்கள் வள்ளுவர்கள் எனப்பட்டனர்.

பேரிமத்தளம்

பேரி மத்தளம் என்பது தோற்கருவி வகையைச் சார்ந்த தமிழர் இசைக்கருவி ஆகும். இது மிருதங்கத்தை விட நீண்டது. பலாக்கட்டையால் உருவாக்கப்பட்டு ஆட்டுத்தோல் போர்த்தப்படுவது. அரளிக் குச்சியால் ஒரு முகத்தில் மட்டும் வாசிக்கப்படுவது. தற்காலத்தில் சில பெரிய கோவில்களில் மட்டும் உலாவின்போது பயன்பாட்டில் இருக்கிறது.

தாளம்

தாளம் எனப்படுவது ஒரு கஞ்ச வகை தமிழர் இசைக்கருவி. இதற்கு சிங்கி, மணி, ஜாலர் என வேறு பெயர்களும் உள்ளன. இது கைக்கு அடக்கமான வட்ட வடிவிலான உலோகத்தால் ஆன இரு பாகங்களைக் கொண்டது. இரண்டையும் சேர்ந்து தட்டி தாளம் எழுப்புவர். பல்வேறு இசைக்கருவிகள் சேர்ந்து வாசிக்கப்படும் போது இசையின் கால அளவுகளை நெறிப்படுத்தும் கருவி தாளம் ஆகும்.

திமிலை

திமிலை என்பதும் தமிழர் இசைக்கருவிகளுள் ஒன்றாகும். இது மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் கட்டப்பட்ட தோற்கருவியாகும். இது பாணி எனவும் அழைக்கப்படுகின்றது. மணற்கடிகார வடிவில் இருக்கும் திமிலை இசைக்கருவியானது கேரளா மற்றும் தென்னிந்தியக் கோவில்களில் இசைக்கப்படுகின்றது. நன்கு செப்பம் செய்யப்பட்ட பலாமரத்தில் செதுக்கப்பட்டு கன்றின் தோலால் (குறிப்பாக 1 - 2 ஆண்டேயான கன்றின் தோல்) மூடப்பட்ட இருமுக முழவுக்கருவிகளுள் ஒன்று. இக்கருவி பஞ்சவாத்தியம் எனப்படும் கருவிகளுள் ஒன்றாக கேரளா மாநிலக் கோவில்களில் இசைக்கப்படுகின்றது.

நமரி

நமரி என்பது ஒரு தமிழர் இசைக்கருவி. மேள தாளங்களோடு வாசிக்கப்படும் ஓர் ஊதுகருவி. இது யானையின் பிளிறல் போன்று ஒலி

கொம்பு

நாதஸ்வரம்

சங்கு

முரசு

ஐம்முக முழவம்

கஞ்சிரா

தாளம்

தம்பட்டம்



தவில்

மகுடி

பம்பை



எக்காளம்

சேமக்கலம்

முழவு

திமிலை

எழுப்பக்கூடியது. இதனை கொண்டாட்ட நிகழ்ச்சிகளிலும் துக்க நிகழ்வுகளிலும் வாசிப்பர்.

தவில்

தவில் என்பது நாதஸ்வரத்திற்குத் துணையாக இசைக்கப்படும் தாள இசைக்கருவியாகும். கர்நாடக இசைக்கும் கிராமிய இசைக்கும் இது பயன் படுத்தப்படுகின்றது. இது தோம்பு உருவத்தில் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். ஆலயங்களிலும் விழாக் காலங்களிலும் திருமணம், குழந்தைக்கு காது குத்தல் போன்ற நன் நிகழ்ச்சிகளிலும் இதன் பயன்பாடு அதிகம். விலங்கின் தோலால் இழுக்கப்பட்டு வளையத்தைக் கொண்டு ஓட்டில் கட்டப்பட்டிருக்கும். இந்தக் கருவியில் வலது பக்கம் இடது பக்கத்தை விடச் சற்று பெரியதாக இருக்கும். தவில் வாசிப்பவர் ஒரு தோல் கயிற்றால் தனது தோளின் மீது தவில் கருவியை மாட்டி முழக்குவார். வலது பக்கம் வலது கையாலும் இடது பக்கம் விரல்களாலும் முழக்கப்படும். எல்லா விரல்களிலும் கவசங்கள் அணியப்பட்டிருக்கும். இடது கையில் Ortia மரத்தால் செய்யப்பட்ட குச்சியை பயன்படுத்துவர்.

பம்பை

பம்பை போன்ற தோல் இசைக்கருவிகளை "அவனத்த வாத்தியம்" (Percussion Instrument) என வகைப்படுத்தியுள்ளார்கள். "அவனத்த" என்றால் மூடிய என்று பொருள். பலா மரத்தில் உருளை வடிவத்தில் செய்யப்பட்ட பம்பையின் இரு பக்கங்களிலும் முரட்டு தோல் மூடியுள்ளது. பலா மரத்துக்குப் பதிலாக பித்தளையாலும் பம்மை உருவாக்கப்படுவதுண்டு.

கொக்கறை

கொக்கறை என்பது என அறியப்படும் நெருக்கமான இரு இசைக்கருவி கள் உள்ளன. ஒன்று மாட்டின் கொம்பால் செய்யப்படுவது. மற்றையது இரும்புக்குழல். முதலாவது கோவில்களிலும் இரண்டாவது சாற்றுப்பாடலின் போதும் பயன்படுத்தப்பட்டது.

கொடுகட்டி (இசைக்கருவி)

கொடுகட்டி என்பது தோற்கருவி வகை சார்ந்த தமிழர் இசைக்கருவி களுள் ஒன்று. இது ஒரு வகைப்பறை எனும் முழவுக் கருவியாகும். இதனைப்

பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்திலும் தேவாரத்திலும் உள்ளன. இக் கருவி தற்காலத்தில் கிடுகட்டி என்றழைக்கப்படுகின்றது. நாதசுரக் கச்சேரி களிலும் இடம்பெறுகின்றது.

சிறுமுரசு

சிறுமுரசு அல்லது சாயரட்சை மேளம் என்பது தோற்கருவி வகை சார்ந்த ஒரு தமிழர் இசைக்கருவி. இது "சிறிய அரைச்சட்டியில் புள்ளிமான் தோல் கொண்டு வார்க்கப்பட்டது". இதனை கோவில்களில் மாலை வழிபாடுகள் முடிந்ததும் இசைக்கப் பயன்படுத்தினர்.

பெருமுரசு

"பெருமுரசு" தோற்கருவி வகை சார்ந்த ஒரு தமிழர் இசைக்கருவி. இது அரைக்கோள வடிவுடையது. இது பெரிய இரும்புச் சட்டியில் மாட்டுத் தோலை வார்த்து உருவாக்கப்படும். பண்டைக் காலத்தில் அறிவிப்பு அல்லது தொடர்பாடல் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

சேமக்கலம்

சேமக்கலம் என்பது கஞ்சக்கருவி வகை சார்ந்த ஒரு தமிழர் இசைக் கருவி. இது தூய வெண்கலத்தால் ஆனது. கோவில்களில், இறப்பு வீடுகளில் இக் கருவி இசைக்கப்படுகின்றது.

மகுடி

மகுடி இந்தியாவில் தோற்றம் பெற்ற ஒரு பண்பாட்டு இசைக்கருவி ஆகும். சமயச் சடங்குகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியாவின் கிராமிய இசையிலும் பாம்பாட்டிகளாலும் பன்னெடுங்காலமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மண் மேளம்

மண்மேளம் என்பது தோல் கருவி வகை தமிழர் இசைக்கருவி. இது பானை வடிவில் மண்ணால் செய்யப்பட்டு இரு பக்கமும் மாட்டுத் தோல் வார்க்கப்பட்ட ஒரு கருவி. பொதுவாக ஒரு பக்கம் கையாலும் மறுபக்கம் குச்சியாலும் இசைப்பர்.

முகவீணை

முகவீணை அல்லது கட்டைக்கழல் என்பது ஒரு துளைக்கருவி வகை தமிழர் இசைக்கருவி. நாதசுவரம் போன்று. ஆனால் அதைவிட குட்டையானது. பரவலாக அறியப்பட்ட நாதசுவரத்தின் ஆதி வடிவம். தூத்துக்குடி, விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டங்களில் இக்கலை மிகச் சிலரால் நிகழ்த்தப்படுகின்றது. அருந்ததியர் சாதியினர் மட்டுமே இக்கலையை நிகழ்த்துகின்றனர்.

கட்டைக்குழல், தவில், பம்பை, உறுமி ஆகிய இசைக்கருவிகள் இக்கலையில் பயன்படுத்தப்படுகின்றன. இக்கருவியில் ஓசையிடுவதற்கு ஏதுவாக, கோவில்களிலும் ஆட்டங்களிலும் கூத்துகளிலும் இக்கருவி பயன்பட்டு வந்திருக்கின்றது. இக்கருவியின் நிலை தற்போது மதிப்பிழந்து காணப்படுகின்றது.

முரசு

முரசு என்பது ஒரு இசைக்கருவியாகும். இந்த இசைக்கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

இந்த முரசுகளில் மூன்று வகை உண்டு

1. வீரமுரசு

இது போர்க் காலங்களில் பயன்படுத்தப்படுகின்றது. போருக்குச் செல்லும் முன்னும், போர் நடக்கும் போதும், போர் முடிந்த பின்பும் முரசு கொட்டுதல் அக்கால வழக்கம். இந்த முரசுவிலிருந்து வெளிவரும் சப்தம் வீர உணர்வினைத் தோற்றுவிப்பதாக இருக்கும். இந்த முரசு வைப்பதற்காகவே உயரமான இடத்தில் தனி மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். இந்த மேடையை முரசுக்கட்டில் என்று சொல்வர்.

2. தியாக முரசு

இது பொருள்களை அன்பளிப்பாக அளிக்க விரும்புபவர்கள், வரியவர்களை வரவேற்க அமைக்கப்பட்ட முரசு இதுவாகும்.

3. நியாய முரசு

நீதி வழங்கும் காலங்களில் நியாயம் கேட்க விரும்புவர்களை அழைக்க அமைக்கப்பட்ட முரசு இது. (மனுநீதிச் சோழன் அரண்மனை முற்றத்தில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணி இது போன்றது)

முழவு

முழவு என்பது தமிழர் இசைக் கருவிகளுள் ஒன்றாகும். முழக்கம் என்ற சொல்லின் பொருளைக் கொண்டு முழவுக்குப் பெயர் அமைந்திருக்கலாம். பனைமரத்தடி, பலாப்பழம் போன்றவை இதற்கு உவமையாக சுட்டப்பட்டுள்ளன. இது குறுகம்பு கொண்டும் கைவிரலைக் கொண்டும் அடித்துத் தாளவிசை எழுப்பிச் சுவைக்கும் கருவியாகும். முழவு என்ற சொல் தாளக் கருவிகளைச் சுட்டும் பொதுச் சொல்லாகவும் ஒரு குறிப்பிட்ட கருவியைச் சுட்டும் சொல்லாகவும் இலக்கியங்களில் இடம்பெறுகிறது. சிலப்பதிகார காலத்தில் தாளக் கருவிகளுள் 'தண்ணுமை' தலைமைக் கருவியாய் விளங்குகின்றது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தால் அண்மையில் நடத்தப்பெற்ற மார்கழித் திங்கள் முழுநிலாவில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், முதன்முதலாக யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் இன்னிய அணி ஒன்று பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களினதும், கல்வியியலாளர்களினதும் பெருமுயற்சியின் காரணமாக உருப்பெற்று உதயமாகியது. இக் கன்னி முயற்சியில் மேற்குறித்த பாரம்பரிய வாத்தியங்களுள் ஒரு சில வாத்தியங்களே பயன்படுத்தியபோதிலும் மக்கள் மனதில் மாண்பைப் பெறக்கூடிய வகையில் நிகழ்ச்சி அளிக்கை செய்யப்பட்டது பெருமைக்குரியதாகின்றது. எதிர்வரும் காலங்களில் இன்னிய அணிகள் பல உருவாக்கம் பெற்று அவ்வணிகளில் பெரும்பாலான பாரம்பரிய இசைக்கருவிகள் உள்ளீர்க்கப்பட்டு விருத்திநிலை செய்யப்பட வேண்டுமென்பது நல்லுலகம் கூறும் கலைஞர்களின் வேணவாவாகும்.❑

நாட்டியக் கலையில் நவரசம்

திருமதி வி. சுனில் ஆரியரத்ன
முதன்மை ஆசிரியர் (நடனம்)
தென்மராட்சி கல்வி வலயம்

மார்கழித் திங்கள் மதி நிறை நன்னாளாம் பதினாறாந் திகதி செழுமை மிக்க குழைக்காடாம் தென்மராட்சியின் "முழு நிலா கலைநிகழ்ச்சி" பூத்துக் குலுங்கி புதுப்பொலிவுடன் பிறந்தது. கல்வியியலாளர்களும் அறிஞர்களும் அமைச்சர்களும் ஆர்வலர்களும் ஒன்றுகுழுமியிருந்த சபா மண்டபம் வரலாறு காணாத எழுச்சியின் வடிவத்தை ஏற்படுத்தி நின்றது.

தென்மராட்சியின் கலாசார மண்டபம் சனத்திரளால் நிரம்பி வழிய கலையின் ஊற்றுக்கண் திறக்க தமிழர் தம் பண்பாட்டின் கலைக்கோலங்கள் பல வானவில்லின் வர்ணஜாலம் போல் வருகைதர அன்றைய பொழுது ரம்மியமாய் திகழ்ந்தது என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

இன்ப விருந்தாய் அமைந்த பாடல்கள், கிராமிய கதம்ப நடனம், பின்னல் கோலாட்டம், புராண படனம் என நீளும் கலை வடிவத்திலிருந்து சற்று மாறுபட்ட நிகழ்ச்சியே நவரச நடனக் கலையாகும். அதைப்பற்றிப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்காகும். மனித வாழ்வுடன் ஒன்றிணைந்ததாகவும் ஒரு மனிதனின் கருவறையிலிருந்து கல்லறை வரை அதன் உணர்வுகளுக்கு உயிர் கொடுப்பதாகவும், ஜீவாத்ம பரமாத்ம தத்துவத்தை அபிநயம் மூலம் வெளிப்படுத்தி ஆன்மீகத்துடன் தொடர்புபடுத்தும் இணைப்பாகவும், மனிதனின் தொடர்பாடல் ஊடகமாகவும், உடல் மொழியாக வும், விளங்கும் சாஸ்திரிய நாட்டிய நிகழ்வு தென்மராட்சி கல்வி வலய நடன ஆசிரியர்களினால் அரங்கிலே 'நவரச நாயகி' நாட்டிய நிகழ்ச்சி எனும் பெயரினைத் தாங்கி மின்னி மறைந்தது என்றே கூறலாம்.

இந்த நடனம் மனதில் சாந்தி, ஆன்மீகம், இறைவனுடன் எம்மை ஒன்று படுத்துதல் போன்ற தெய்வீக கலையம்சத்துடன் திகழ்ந்தது என்றே கூறுதல் வேண்டும். இரஸம் என்பது சுவை. அதாவது, சுவைத்தல் எனப் பொருள்படும். நாம் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் மகிழ்ந்து பெறுகின்ற அந்த இன்ப உணர்வே இரஸம் ஆகும். உணவில் அறுசுவை போல

நாட்டியம், நாடகம் ஆகிய கவின்கலைகளில் நவரசங்கள் கலைக்கு சுவை சேர்க்கின்றன. எமது அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்த ஒரு செயற்பாடா கவே நவரசம் காணப்படுகின்றது.

மனிதன் இயல்பாகவே அழுகின்றான், சிரிக்கின்றான், அருவருப்படை கின்றான், அன்பு செலுத்துகிறான், கோபப்படுகிறான், வீரதீரங்களை வெளிப் படுத்துகின்றான், அச்சமடைகின்றான், அமைதி கொள்கின்றான், கருணை காட்டுகின்றான் இவை யெல்லாம் பகுத்தறிவு உணர்வின் வெளிப்பாடுகளாகும்.

பழந்தமிழ்ப் பெருங்குடிகளுள் பெரும் புகழ்பூத்த தொல்காப்பியம் எனும் பழந்தமிழ் இலக்கண நூல் இரஸங்களை எட்டாக வரையறுக்கின்றது.

"நகையே அழுகை இனிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா பெவட்டாம் மெய்ப்பா டென்ப"

நகை, அழுகை, இனிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனக் கூறப்படும் எட்டு மெய்யினிடத்து தோன்றும் வேறுபாடு என்று கூறுவர். அதேபோல நாட்டிய சாஸ்திரத்திலும் இரஸங்களை எட்டு என்றே வரையறுத்துள்ளனர். இவர்களுக்குப் பின்வந்த நூலாசிரியர்கள் இரஸங்களை ஒன்பது என வகைப்படுத்தியுள்ளனர்.

இதனை "ஷிருங்கார, ஹாஸ்ய, கருணா, ரௌத்ர, வீர, பயானகாஹ பிபத்ஸாத்புத சாந்தஸ்ச, ரஸஸ் புர்வை உதாஹ்ருதாஷா" என்ற ஸ்லோகம் அழகாகக் கூறுகின்றது.

இதன் கருத்து என்னவெனில் ஷ்ருங்காரம், ஹாஸ்யம், கருணை ரௌத்ரம், வீரம், பயானகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் ஆகிய ஒன்பது இரஸங்கள் என முன்னோர்களால் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஒரு அழகான நடன நிகழ்வை பார்க்கும்போது, பார்வையாளர்களுக்கு உண்டாகும் உணர்வே இரஸம் ஆகும். இரசிப்பதனால் இரசனை தோன்றி அதிலிருந்து இரஸம் பிறக்கிறது. இதனால் ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. ஒரு நடனமானது தன் திறமைகளினாலும் கண்களினாலும் முகத்தினாலும் மற்றும் ஹஸ்த அபிநயங்களினாலும் பாவத்தை பூரணமாக வெளிப்படுத்தும் போது அங்கே இரஸம் பிறக்கின்றது. ஒரு ஆடல் நங்கைக்கு கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல மனம்வழி பாவம் பிறக்க அதனின்று சுவை தோன்றுகின்றது.

இந்த நவரசங்களை பாவம், அங்கங்கள், வாக்கு, அபிநயம், முகம், நிறங்கள் என்பவற்றினால் வெளிப்படுத்த முடியும். அதாவது, கவிஞனின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தல் பாவம் ஆகும்.

இந்த இரசத்தை தோற்றுவிப்பதற்கு காரணமாய் உள்ளது விபாவம் எனப்படும். தோற்றுவிப்பதற்கு காரணமாய் அமைபவை அதற்குரிய பொருட்கள் என அதாவது அவற்றைத்தூண்டி விடும் பொருட்கள் என ஆலம்பன பாவம், உத்தீபன் பாவம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. நவரசங்கள் உதயமாகும் போது ஒருவரின் உடலில் ஏற்படும் மாறுதல்கள் அனுபாவம் ஆகும். இவை நிரந்தர தன்மை உடையவையாக உள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்தே புராணங்களின் நவரச நாயகியாக உமை, சிவன் கதையை மையமாக வைத்து அதில் சிவனை உமை கதையில் தடுத்தாட்கொண்ட புராணத்தில் எவ்வாறு எச்சந்தர்ப்பத்தில் நவரசங்கள் அமைகிறது என்பதை சித்திரித்து காட்டுவதாக நவரச நாயகி சிவனை அடைந்த கதை என கூறி அபிநயிக் கின்றனர்.

சிவனும் உமையும் மங்கல ரூபினியாக சாம்பவி சிவனுடன் அன்புடன் சிருங்காரமாக வாழ்வை நடத்தி வருகின்றனர் என்பதை சிருங்கார ரசத்துடன் சித்திரித்து அவர்களின் சிவன் உமையின் திருமண பந்தத்தையும் அன்பினையும் சித்திரித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இதனையே நாட்டியக் கலையில் நவரசம் என்பதில் காணக்கூடியதாக உள்ளது.

கைலைமலையில் கடுந்தவம் புரிந்துகொண்டு இருக்கும்போது சிவனிடம் மையல்கொண்டு மகேஸ்வரி பார்வதி உருகினாள். அப்போது சிவன் வயோதிப வேடம் பூண்டு வந்ததை கண்ட பார்வதி. அவரின் செயல்கண்டு மெய் வெறுத்தாள். இதுவே வீபத்ச இரஸம் அடைவதை காணக்கூடியதாக உள்ளது.

அரியும் அயனும் காணாத அம்பலாணர் கரியுரி போர்த்து கனலும் மழுவும் ஏந்தி கபால மாலைகளுடன் காட்சியளிக்கும் போது அதனைக் கண்டு பார்வதி பயம் கொள்கிறாள். இதில் நாம் பயானக இரஸத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

அடுத்து, தேவர்களும் அசுரர்களும் அமுதம் எடுப்பதற்காக பாற்கடல் கடைந்தனர். வடவரையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிறாகவும் வைத்து கடைந்துகொண்டு இருந்தனர். கடையும் வேகம் தாங்காது விசத்தைக் கக்கியதும் அதனை சிவன் பருகி திருநீலகண்டர் ஆகியதை பார்த்து பார்வதி

அதிசயப்படுகின்றார். இதில் நாம் அற்புத ரஸத்தை எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

நாரதர் சிவனுக்கு கொடுத்த மாங்கனியைப் பெறுவதற்குச் சிவன் பிள்ளைகளுக்குப் போட்டி வைக்கும்போது முதலில் உலகைச் சுற்றி வருபவருக்கே கனி என்னும்போது முருகன் மயில்வாகனத்தில் உலகை சுற்றி வர, பிள்ளையார் தாய் தந்தையரை வலம் வந்து கனியைப் பெறும்போது அதனை கண்டு நகைபுரிகின்றார். இதில் பார்வதிக்கு ஹாஸ்ய ரஸம் பிறந்ததை நாம் காணக் கூடியதாக உள்ளது.

ஆதிபரமேஸ்வரனின் படைகளுடன் மதுரை மீனாட்சி அம்மன் போர் புரிந்து செல்ல கதிகலங்கி சிவனின் சேனை நடுங்கும்போது, மதுரை மீனாட்சி அம்மன் வீரமுடன் காட்சியளிப்பதைக் காணக்கூடியதாய் உள்ளது. அதில் வீர ரஸம் மிளிர்வதை அவதானிக்கக் கூடியதாயும் உள்ளது.

பகீரதன் செய்த கடும் தவத்தால் மகேஸ்வரன் கங்கையை முடிமேல் தரித்தார். அதனைக்கண்டு மகேஸ்வரி சீறி மனம் நொந்து பொங்கி எழுந்து உருத்திர காளியாக மாறினாள். இதன்போது கோபரஸ வெளிப்பாட்டைக் காணக்கூடியதாய் உள்ளது.

தட்சணாமூர்த்தியாகிய சதாசிவ வடிவின் தக்கன் மகன் கடுந்தவம் புரிந்தான். அதனால் சக்தி சிவத்துடன் சேர்ந்து சாந்தம் அடைந்து நின்றான். இதில் சாந்த ரஸத்தைக் காணக்கூடியதாய் உள்ளது.

அடுத்து, தாயினும் அன்புடையவளான உமையம்மை தஞ்சம் என்று வரும் அடியவர்க்கு கருணை வடிவாக காட்சியளிப்பதை நாம் காணக்கூடியதாய் உள்ளது. இதனை உமை சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் காணக்கூடியதாய் உள்ளது.

எனவே, தொகுத்து நோக்கும்போது நவரசங்களின் வெளிப்பாடு எமது அன்றாட வாழ்க்கையில் இடம்பெறுவதை போல புராண இதிகாசக் கதைகளிலும் நாம் கண்டு கொள்ளக்கூடியதாய் உள்ளதை புராணக் கதைகளில் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை நாட்டியம் மூலம் நாம் கண்முன் கொண்டு வரக்கூடியதாக உள்ளது என்றால் மிகையாகாது.❑

காலந்தோறும் இசை

திரு. க. ஜோதிரட்ணராஜா,
ஆசிரியர்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இயல், இசை, நாடகம் என்னும் பகுப்பாய் விளங்குவது முத்தமிழ். இவற்றுள் அறிவிற்கு விருந்தாய் அமைவது இயற்றமிழ் அறிவுக்கும் செவிக்கும் விருந்தாய் அமைவது இசைத்தமிழ். அறிவுக்கும் செவிக்கும் விழிக்கும் விருந்தாய் அமைவது நாடகத் தமிழ். இவற்றுள் இசைத்தமிழின் வளர்ச்சி தொல்காப்பியர் காலத்தில் இருந்து தொடங்குகின்றது. எனினும், இதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விசை சிறப்புற்றிருந்தது எனவும் கருதலாம். இசை நீண்டு ஒலிக்கும் தன்மையை அதாவது பாடலின் ஒலி நீள்வது இசை நீட்டமாகக் கருதப்படுவதையும் அளபெடை அதாவது எழுத்துக் களுக்கும் இசைக்கும் இடையே உள்ள தொடர்பினையும் தொல்காப்பியர்,

ஆளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழி
இசையொடு சிவணிய நரம்பின் மறைய
என்மனார் புலவர்.

(தொல் எழுத்து 33)

என்று கூறியுள்ளார். தமிழர்கள் அருவியிலிருந்து வீழ்கின்ற நீரின் ஓசையைக் கூட இசையுடன் ஒப்பிட்டுள்ளனர். யாழின் இசையும் குழலின் இசையையும் மழவின் ஒலியும் ஒன்று சேர்ந்தது என்று சொல்லும்படியாக அருவியில் நீர் ஒலித்துக் கொண்டிருந்ததாம் இதனைத் திணைமாலை

"யாழும் குழலும் முழவும் இயைந்தன
விழும் அருவி விறன்மலை நன்னாட"

எனக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான பல செய்திகளை சங்க இலக்கியங்களில் காணலாம்.

தமிழ் இலக்கியங்கள் சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களுக்கு குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற காரணப் பெயர்களைக் குறித்துள்ளனர். உலக இசைகள் அனைத்திற்குமே இந்த ஏழு சுரங்களே ஆதாரமாய் அமைந்திருக்கின்றன.

தொல்காப்பியர் காலத்தில் புலவர் எனப்படுவோர் முத்தமிழ் புலமை சான்றவராக இருந்துள்ளனர். அவருக்குப் பின் காலப்போக்கில் இயற்புலமை சான்றவர், இசைப்புலமை சான்றவர் என்று பிரித்துக்காணும் நிலை தோன்றிய நிலையிலும் அவை ஒருங்கே அமையப் பெற்றுத் திகழும் மரபும் தொடர்ந்து வந்துள்ளது என்பதனை இளங்கோவடிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் படைப்புக்களால் அறியமுடிகின்றது.

குரலிசையாளர் எழுப்பும் எல்லா ஓசைகளும் உந்தியில் தோன்றி உடம்பின் உள்ளே எட்டு இடங்களில் பொருந்தி இறுதியில் ஒலிப்பெட்டி எனத்தக்க வாய்வழியாக பிறர் கேட்குமாறு வெளிவரும். "உந்தியில் தோன்றி வாயில் நீங்காமல் கேளாத ஒலியாக உள்ளே ஓசை நாடிக்கொள்ளுதலும் அதற்கு மாத்திரை அளவு கொள்ளு தலும் அந்தணரின் இசையான வேதத்திற்கு உரியதாகும். இயல் தமிழுக்குரிய எழுத்துக்களின் பிறப்புக்கூறும் நாள் அந்த முறையை பின்பற்றாமல் புறத்தே கேட்கும் எழுத்தொலிக்கு மட்டும் மாத்திரை கூறினேன் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

"அகத்தெழு வளியிசை அதில் தபநாடி
அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே
அ.ந்தி வண்நுவலாது எழுந்து புறத்து இசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே"

(தொல் 102)

என்னும் நூற்பகுதி இதனைத் தெளிவுபடுத்துகின்றது. தொல் காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழர் தம் அன்றாட வாழ்வில் இசையினை இன்றியமையாத ஒன்றாகக் கொண்டிருந்தமையால் காலப்போக்கில் தாம் வணங்கும் இறைவனை இசைவடிவில் காணவும் இசையினை மீட்டுபவராக இறைவனைக் காணவும் முற்பட்டனர். "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமு தாய்" என்று அப்பரும் அருள்வாராயினர். "எம்மிறை வீணை வலிக்குமே" என்றும் "ஆக்குவித்தார் குழலால் அரங்கேசா" என்றும் அமைந்த திருவாக்குகள் முறையே சிவனும் திருமாலும் இசைக்கருவிகளை மீட்டினர் என்பதனைக் காட்டுகின்றன.

சிலப்பதிகாரம் ஓர் இசைத்தமிழ் சாகரமாகும். தமிழ் இசையின் இலக்கணத்தை இன்று வரை பேணிக்காத்து வரும் இசை இலக்கியமாகத் திகழ்கின்றது. இதில் குறிப்பாக,

மங்கல வாழ்த்துப்பாவில் இசைத்தாளத்தின் நடை வகைக்குப் பாடல்கள், அரங்கேற்று காதையில் - யாழியல், குழலியல், உத்து, இயல், முழவியல், இடமுறை பண்ணப் பெயர்ப்பு, இணை முறை, அரங்க அமைப்பு, நட்டுவனியல், அபிநயவியல், வாரம் பாடல் முறை என்பனவும்

கானல் வரியில் எண்வகை இசைக் கரணமும் நெய்தல் நிலப் பண்ணின் (தோடியின்) ஆரோகணம், அவரோகணம் வரிப்பாடல் வகைகள்.

வேனிற் காதையில் இணை, கிளை, பகை, நட்பு, நரம்பு, காணும் முறை மருதநிலப் பண் (கரகரப்பிரியா) ஆரோகண, அவரோகண வரிப்பாடல் வகைகள்.

இவ்வாறு சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியம் இசை வரலாற்றில் ஒப்பற்ற இசையிலக்கணம் கூறுவது இசை இடையிட்ட காப்பியம் ஆகும்.

அடுத்து, திருவிளையாடற் புராணத்தில் ஒரு சுவையான இசை நிகழ்ச்சி பற்றிய செய்தி காணப்படுகின்றது. வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்னும் மிகச் செருக்குடன் கூடிய இசைப்புலவர் வரகுண பாண்டியனிடம் பரிசினைப் பெற்று பாண்டிய நாட்டில் தங்கியிருக்கையில் பாணபத்திரனின் வேண்டுகோளுக் கிணங்கி சோமசுந்தரப் பெருமான், தன்னை பாணபத்திரனின் கடைசிச் சீடன் எனக் கூறிக்கொண்டு ஏமநாதன் தங்கியிருந்த வீட்டின் வாயிலில் அமர்ந்து சாதாரிப் பண்ணை இசைக்க அதனைக் கேட்ட ஏமநாதன் பயந்து செருக் கொழிந்து போட்டியில் கலந்து கொள்ளாமலேயே வடநாட்டுக்குச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது.

அடுத்து பதினாறாம் நூற்றாண்டில் முஹாலயர்களின் படையெடுப்பால் கலாசார மாற்றங்கள் ஏற்பட்டு இசைமரபும் மாறுபட்டது. ஆனால் தென்னாட்டில் பழமையான தமிழிசையே, அதாவது கர்நாடக இசையே (கர்நாடகம் என்னும் சொல் பழமையைக் குறிக்கும்) இருந்து வந்துள்ளமையால் தமிழிசையே கர்நாடக இசை என அழைக்கப் பட்டது. தமிழ்ப் பண்களே இராகங்களாக உருவெடுத்து வளர்ச்சியுற்றன எனலாம்.

எனவே, பண்கள் தமிழிசையில் கி.மு. இரண்டாயிரத்தைநூறு ஆண்டு களுக்கு முன்னரே சிறந்து விளங்கியதையும் இராகம் என்றும் இராகம் என்னும் சொல் பண்ணைக் குறிக்கும் சொல்லாக தமிழ் இசை நூல்களில் முதன்முதலில் பயன்படுத்தியிருப்பதையும் காணலாம். பண்களே கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் இராகங்கள் என்னும் பெயர்பெற்று உருவெடுத்து வளர்ச்சியுற்றது என்பதையும் நம் பண்டைய தமிழ் இசைப்பண்கள் இந்திய நாடு முழுவதும் பரவியிருந்தன என்பதையும் இன்றைய கர்நாடக இசை தமிழ் இசையே என்பதையும் நாமறியலாம்.

வாழ்க்கையில் இசை

பிறப்பிலிருந்து இறக்கும் வரை மனிதன் இசையில் ஊறியிருக்கிறான். அழும் குழந்தை தாலாட்டுப் பாட்டைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டுத் தூங்க ஆரம்பிக்கின்றது. தூக்கமின்றி அல்லல்படுவோர் அனைவரும் நல்ல இசையை ஒலிப்பதிவு நாடாவழியாகக் கேட்டதன் விளைவாக நல்லுறக்கம் கொள்வதாகவும் ஒவ்வொரு நாளும் குரலிசைப் பயிற்சி செய்வதால் குறட்டை யிடும் சத்தத்தை நீக்க முடிகின்றது என்றும் மருத்துவ ஆய்வாளர் டாக்டர் எலிசபெத் ஸ்காட் கூறுகின்றார். உடல் நலம், மனநலம் குன்றிய நோயாளர் களுக்கும் மன இறுக்கநிலையில் பாதிக்கப் பட்டவர்களுக்கும் நல்ல இசையைக் கேட்பதால் நற்பயனைத் தருவதாக மருத்துவர்கள் கூறகின்றனர். வயது முதிர்ச்சி காரணமாக நினைவாற்றலை இழந்தவர்கள் நல்லிசை வழியாக அதை மீண்டும் பெறக்கூடும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவியர் இசை மூலமாக பல அரிய கருத்துக்களைக் கற்றுக்கொள்கின்றனர். பக்திப் பாடல்கள் மக்கள் மனதை இறைவன் பக்கம் ஈர்க்கின்றன. கடின வேலை செய்யும் உழைப்பாளிகள் தங்கள் வேலைக் களைப்பை தீர்க்க பாடிக்கொண்டே வேலை செய்கின்றனர். இறக்கும் பொழுதும் இறந்தவரின் உடலைப் புதைப்பதற்கோ, அல்லது எரிப்பதற்கோ எடுத்துச் செல்லும் பொழுதும் ஒப்பாரி போன்ற பாடல்களினாலும் வேறு வகைப் பாடல்களினாலும் இசைக்கருவிகளினாலும் மக்கள் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றனர். எனவே, பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதன் இசையோடு இணைந்துள்ளான் என்தை உணர்கின்றோம்.

ஒரு இசைக்கலைஞர் தீபக் என்ற இராகத்தைப் பாடி நெருப்புண்டாகச் செய்ததாகச் சொல்லப்படுகின்றது. முத்துஸ்வாமி தீட்ஷிதர் அமிர்தவர்ஷினி

இராகம் பாடி மழையை வருவித்ததாக அவரது வரலாற்றில் நாம் காண்கின்றோம். இந்த இராகத்தைப் போலவே மேக இராகக்குறிஞ்சி இராகத்தையும் சிறப்பாக இசைத்தால் வறட்சிக் காலத்திலும் மழையைப் பெறலாம் என்றும் பெரிதும் நம்பப்படுகின்றது. பசுக்கள் இனிய இசையைக் கேட்பதன் விளைவாக நிரம்பப் பால் கொடுப்பதாக அறியமுடிகின்றது. பயிர்கள் நன்கு வளர்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆகவே, இசை மனித வாழ்வை வளம்படுத்துவதற்காக இறைவன் அளித்துள்ள பெருங்கொடை என்றால் மிகையாகாது.

இராகத்தின் குணங்கள்

மனித வாழ்வைக் பல வழிகளிலும் வளம்படுத்தும் இசைக்குப் பல குணங்கள் உண்டு. அக் குணங்கள் இராகத்திற்கு இராகம் வேறுபடுகின்றது. ஒவ்வொரு இராகமும் இயற்கையிலேயே சில குணங்களைத் தன் இசையமைப்பால் பெற்றுள்ளது. உதாரணமாக நீலாம்பரி இராகத்தின் இசையமைப்பு கேட்பவரின் இரத்த அழுத்தத்தினைச் சிறிது குறைத்து நித்திரையை வரவழைக்கச் செய்யும். புன்னாகவராளி இராகத்தின் இசை யமைப்பு மெல்லிய அதிர்வுகளை ஏற்படுத்தி கட்செவியான நாகத்தினை வயப்படுத்தும். நாட்டை இராகம் கேட்பவரின் மனதில் தைரியத்தினை உண்டாக்கி வீரத்தினைத் தரவல்லது. எனவே, இராக குணம் என்பது மனித குணத்தினை வெளிக்கொணர ஒரு கிரியா ஊக்கியாகப் பணியாற்றும். அதன் இசை அமைப்பையே வெளிப்படுத்தும்.

இசையில் நனைந்த முழுநிலா

எமது தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் பெருமெடுப்புடன் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட மார்கழித் திங்கள் முழுநிலா நிகழ்ச்சியில் இசையின் பங்கும் பெரிதும் அனைவரையும் பிரமிக்க வைத்தது. "இசையால் வசமாகா இதயம் எது, இறைவனே இசை வடிவம்" என்பதற்கிணங்க சுவைஞர்களின் சுவைக்கு நல் விருந்தாய் அமைந்தது. செவியார அனைவரும் நுகர்ந்து இன்புற்றனர்.

முழுநிலா விழாவில் நிலவினைப் போற்றி இசைத்த கீதம் சுவைஞர்களின் மனதை வருடிச் சென்றது. பல புதிய கருத்துகளையும் அறைகூவலையும் விட்டுச் சென்றது. கல்யாணி இராகத்தில் அமைந்த

"நிலவே முழுநிலவே . . " என்ற பாடலை எழுதி இசையமைத்தவர் சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன் அவர்கள். இன்றைய காலச்சூழ்நிலையில் கலைகள் மதிக்கப்பட்டு வருவதன் தன்மை குறைத்து மதிக்கப்படுவதையும் கலைஞர்கள் வளர்ந்திட நல்ல களம் வேண்டும் என்றும், பல புதிய புதிய கலைவடிவங்கள் தோன்ற வேண்டும் என்றும் மேலும், கலைஞன் ஆனவன் சுதந்திரமாக வாழவேண்டும் என்றும் அதற்கு அவனது சூழல் இடம்கொடுக்க வேண்டும் என்றும், தனது மன ஆதங்கத்தினை வெளிப்படுத்த நல்ல களமாக அவர் அன்றைய நிகழ்ச்சியினைச் சாதகமாக்கிக் கொண்டது சாலப் பொருந்தும்.

தூய தமிழிசை தன் இருப்பில் நிலைப்பது இன்று கேள்விக் குறியாகவே உள்ளது. நாம் முன்பு குறிப்பிட்டது போல கர்நாடக இசையின் போக்கு காலத்துக்கு காலம் மாறி அதன் தூய்மை இழந்து ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஏனெனின், மேற்கத்தேய இசைப் பாணிகள், கலாசாரங்கள், பண்பாடுகள் என்பவற்றின் தாக்கம் இசையையும் விட்டு வைக்கவில்லை. எனினும், புதிய மாற்றங்களை உள்வாங்குவது இன்றைய காலத்தின் தேவையாகும். அதனை நன்குணர்ந்த சுவைஞர்களின் மனோ நிலைகளை நன்கு படம்பிடித்து இன்றைய சமுதாய இளைஞர்கள் சுவைக்கும் படியாக மெல்லிசைப் பாடல் மக்களின் மனங்களை வருடிச் சென்றது.

சங்கராபரணத்தை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட பாடல் நிலவு பற்றியதாகவே இருந்தது சாலப் பொருத்தமுடையது. அதுமட்டுமன்றி கர்நாடக இசை இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதை அரங்கம் கண்ட கர்நாடக இசை நிகழ்வும் மனங்கொள்ளத்தக்கது. வாசந்தா இராகத்தில் அமைந்த மயில் மீது விளையாடும் வடிவேலனே என்ற பாடல் எல்லோர் மனங்களிலும் விளையாடிச் சென்றது. கருணா ரசம் கொண்ட இந்த இராகம் சுவைஞர்களுக்கு நல்ல விருந்தாய் நனைந்தது. சின்னஞ்சிட்டுக்களின் புதிய மெட்டுக்கள் வாத்தியங்களில் ஒலித்தமை மனதைக் கொள்ளை கொண்டது. குரலால் மட்டும் இசை வரும் என்பதல்ல விரலாலும் இசை பிறக்கும் என்பதை கட்டியம் கூறுவதாய் அமைந்தது அந்த இசை.

மேலும், ஆசிரியர்களின் மருதநிலக் கானம் பல இராகங்களையும் பல நடைகளின் சங்கமமாய் உடையலங்காரத்துடன் அனைவரையும் மருதநிலம்

நோக்கி நடைபயில வைத்தது. புன்னாகவராளி இராகத்தில் அதன் முடிப்பு அமைந்தது என்றும் மனங்கொள்ளத்தக்கது.

அத்துடன், இசை நாடக நிகழ்வு பல இராகங்களின் சேர்க்கையாக அமைந்த ஒரு கூட்டுக் கலையாக பிரகாசித்தது. முகாரியில் தொடங்கி பைரவி, தன்யாசி, சிந்துபைரவி, மத்தியமாவதி, மோகனம், அடானா, செந்துருத்தி போன்ற இராகங்கள் அவ்வப்போது வந்து சென்றமை கலைஞர் களை மேலும் இன்பத்தில் திளைக்க வைத்தது. இசை நாடகம் என்பது நடிப்பிலும் பார்க்க அதன் இசை வடிவங்களின் தன்மையிலேயே தங்கி யிருக்கிறது என்பதை அது புரியவைத்தது.

இவ்வாறு காலந்தோறும் பல பரிணாமங்களைப் பெற்ற இசையானது, எம்மொழி பேசும் மக்களினதும் எந்நாட்டவரினதும் பொது மொழியாக அமைகின்றது அந்தவகையில் சாஸ்திரிய இசை தொடக்கம் கிராமிய இசை, மெல்லிசை போன்ற வடிவங்களையும் வாத்திய விருந்தாகவும் இசை சங்கமித்தது. அனைவர் மனதிலும் என்றும் நீங்காதிருக்கின்றது. முழுநிலா நிகழ்வின் இசையின் பல்வேறு வடிவங்கள் இராக ஆலாபனைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இசை என்றும் போற்றப்பட வேண்டியது. அது என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும். பண்பட்ட நல்ல மனித சமுதாயத்தை உருவாக்குவதில் இசைக்குப் பெரும் பங்குண்டு என்பதனையும் கட்டியம் கூறியது. வாழ்வில் இசையை இசைய வைப்போம். தமிழிசையை தரணி உள்ளவரை காப்போம். முழுநிலா போன்ற இன்னும் பல கலை நிலாக்கள் உதயமாகி கலையை வளம்படுத்த வேண்டும் என்பதே எமது பேராசை.❑

பின்னல் கோலாட்டம் – ஓர் அறிமுகம்

திருமதி தர்சினி பீதாம்பரன்,
ஆசிரியை,
யா/மகளிர் கல்லூரி சாவகச்சேரி

பெண்கள் சிறிய கோல்களை வைத்து ஆடுதல் கோலாட்டம் எனப்படும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்துவமான தொழிற்பிரிவுகள் வளர்ச்சியடைய அவர்கள் பயன்படுத்திய கோல்களுக்கிடையே அளவு வேறுபாடுகள் தோன்றின. வாழ்வியல் நடைமுறைகளில் பாயில் பரவிய தானியக் கதிர்களிலிருந்து தானியங்களைப் பிரித்து எடுக்கவும் புளியம்பழத்தின் கோதுகளை உடைக்கவும், பனம்பழங்களிலிருந்து பனம்பாணி கறக்கவும் பெண்கள் சிறிய கோல்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இவ்வாறாகத் தொழில் முறை சார்ந்து பயன்படுத்திய கருவியான கோல் பின்னர் ஆடலுக்குரிய கருவியாயிற்று.

பெண்கள் ஆடிய கோலாட்டம் மென்மையான அசைவுகளைக் கொண்டதாக அமைந்தது. இவர்கள் இரு வண்ணத் தடிகளைப் பயன்படுத்தி ஆடுவர். ஆடும்போது தமது கோல்களைத் தாமே மோதிச் சத்தமுண்டாக்கி ஆடுதலைச் "சரவை" என்பர். தமது கோலை மற்றைய பெண்களுடன் மோதச் செய்து ஆடுதலை "எதிர்ச் சரவை" என்பர். அதேபோன்று பக்கவாட்டில் மோதுதல் "பக்கச் சரவை என்றும் கைகளை உயர்த்தி மோதுதல் "மேற்சரவை" என்றும் கூறப்பட்டது. இக் கோலாட்டமானது பெரும்பாலும் மாரி அம்மன் பொங்கல், நவராத்திரி, சுதந்திரதினவிழா மற்றும் பாடசாலை வைபவங்களில் இடம் பெறுகின்றது.

இவ்வாறான பெண்களின் கோலாட்டத்தின் பிறிதொரு வளர்ச்சியே "பின்னல் கோலாட்டமாகும்". மரக்கிளையில் கயிறுகளைக் கட்டி, கயிற்று நுனியில் கோல் களைக் கட்டி அவற்றைப் பிடித்து சுழற்றி ஆடும்பொழுது கயிறு நீண்ட பின்னல் வடிவில் வளரும். பின்பு பாடலுக்கு ஏற்ற வகையில் ஆட்டத்தை நிகழ்த்தும்போது பின்னல் குலைப்பு ஏற்படும். அவ்வாறான பின்னல் கோலாட்டத்திற்கான உதாரணமாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்.

"வண்ண வண்ணக் கையில்
கோல்கள் குலுங்கிட
சின்னச் சின்ன இழை
சுற்றிச் சுற்றிவர

பின்னல் வளைப் பெடி
பின்னல் வளைப்பெடி
சின்னச் சின்னப் பெண்ணே
பின்னல் வளைப்பெடி.

சுற்றி வந்த பின்னல் வளைப்பைக் குலைத்து ஆடுதலை "பின்னல் குலைப்பு" என்று கூறுவர். அந்த வகையில்,

"வண்ண வண்ணக் கையில்
கோல்கள் குலுங்கிட
சின்னச்சின்ன இழை
சுற்றிச் சுற்றி வர
பின்னல் குலைப்பொடி
பின்னல் குலைப்பெடி
சின்னச் சின்னப் பெண்ணே
பின்னல் குலைப்பெடி.

இவ்வாறாகப் பல வண்ணங்களைக் கொண்ட கயிறுகளினால் பின்னல் இழைப்பதும் குலைப்பதும் ஆடலுக்கு மேலும் மெருகூட்டுவதாக அமையும். வலை பின்னுதல், பாய் பின்னுதல், பாயிழைத்தல், கூடை முடைதல் முதலியவற்றில் ஏற்பட்ட பின்னல் அனுபவங்கள் கலையாக்கச் செயல்முறையில் ஊடுருவியதன் விளைவாகவே இப்பின்னல் கோலாட்டம் வளர்ச்சிபெற்றது.

கோலாட்டக் காலசைவுகள் விரிதல், குவித்தல், சறுக்கல், சுற்றல் முதலானவற்றைக் கொண்டிருக்கும். பாதங்களின் விரற்பகுதியை அகலவைத்து அசைதல் "பிரித்தல்" என்றும் விரற்பகுதிகளை ஒன்று சேர்க்கும் விதத்தில் அசைதல் "குவித்தல்" என்றும் ஒரு காலை முன்னோக்கி வைத்து மறுகாலை பின்னோக்கி வைத்து நடத்தலைச் "சறுக்கல்" என்றும் ஒரு காலைப் பூமியில் ஊன்றி மறுகாலை உயர்த்திச் சுழன்று வருதல் "சுற்றல்" என்றும் கூறப்படும். மேலும், பெண்களின் கோலாட்ட அசைவுகள் "காந்த அசைவுகள்" என்றும் "பிஞ்சசைவுகள்" என்றும் கூறப்படுவது வழக்கம்.

எனவே, இத்தகைய கோலாட்டங்களில் ஒன்றான பின்னல் கோலாட்டம் தென்மராட்சிக் கல்விவலயத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மார்கழி மாத முழு நிலா விழாவின் கலைநிகழ்ச்சிகளில் ஒன்றாக அரங்கம் கண்டது. இந்நிகழ்ச்சியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பன்னிரண்டு மாணவிகள் பங்குபற்றி அனைவரும் ஆனந்தம் கொள்ளக்கூடிய வகையில் சிறப்புற அளிக்கை செய்தனர்.❑

நன்றி

காலத்தின் பதிவாக காத்திரமான கலை வெளிப்பாட்டை வெளிப்படுத்தத் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக மார்கழி முழு மதியினை நன்றியுணர்வுடன் நினைவுகூருவதில் அகமகிழ்கின்றோம். கலையின் வெற்றிக்காகவும் கல்வியின் முன்னேற்றத்திற்காகவும் எம்மை வழிப்படுத்தும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு எமது மனமார்ந்த நன்றியறிதலை வெளியிடுகின்றோம்.

முழுமதிநாள் கலைவிழா நிகழ்ச்சியினை முழு உலகமும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் வலயக் கல்விப்பணிப்பாளரின் வழிகாட்டலில் வடிவமைத்த வலயக் கல்விப் பணிமனையின் உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர் கள், மாணவச் செல்வங்கள், பாடசாலைச் சமூகத்திற்கும் நன்றி கூறி நிற்கின்றோம்.

மேலும், விழாவின் வெற்றிக்கு வித்திட்ட கொடை யாளர்களாகிய வணிகப் பெரு மக்களுக்கும் மனம்நிறைந்த நன்றி உரித்தாகட்டும். அத்துடன், அரங்க நிகழ்ச்சிகளை ஆற்றுகை செய்வதற்குக் களம் தந்த தென்மராட்சிக் கலாமன்றத்தினருக்கும் மற்றும் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினருக்கும், மேலாக நிகழ்ச்சிகளை வரிவடிவாக்கி தென்னவள் எனும் பிரசவிப்பிற்கான ஆக்கங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய அன்புள்ளங் களுக்கும் ஆசிச் செய்தியில் தொடங்கி வாழ்த்துரை வரைக்கும் உள்ளத்தின் உணர்வை வெளிப்படுத்திய துறைசார்ந்த பெரியோர் களுக்கும் நன்றி உரித்தாகட்டும். அத்துடன் அழகுற அச்சிட்டு வெளியிட பங்காற்றிய கஜானன் பன்முக சேவை உரிமை யாளருக்கும் பணியாளர்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றோம்.

தென்னவள் வருகைக்குழு.

IOC

Lanka IOC

யாழ் மண்ணில் முதன்முதலில் பெருமையுடன் தடம் பதித்த லங்கா IOC

சிவா எரிபொருள் நிரப்பு நிலையம்

உலகத்தரம் வாய்ந்த Xtra Premium Euro 3 மற்றும் Xtra Mile களை வழங்கிய IOC நிறுவனம் தற்போது உங்கள் மத்தியில் சாவகச்சேரி நகரில் நுணாவில் சிவா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தடம் பதித்து சிறப்பு வரவேற்பை பெற்றுள்ளது. அதேபோல் சகல வாகனங்களுக்குமான சேவில் செய்யக்கூடிய முறையில் அமைக்கப்பட்ட கைதேர்ந்த பயிற்சியாளர்கள் மூலம் சேவில் செய்து சிறப்பாக வழங்கி வருகின்றது.

ஒரே கூரையின் கீழ் அனைத்து வசதிகளுடன் கூடிய HNB ATM, Nitrogion Air, Litro Gas, Air, Credit Card முறை என்பனவற்றையும் வழங்கி வருகின்றது.

2014 ம் ஆண்டு புதிய பரிமாணத்துடன் சூப்பர்மார்க்கற் மற்றும் றெஸ்ரோறன்ற் சாவகச்சேரி நகரிலும் நுணாவில் A9 இலும் பிரமாண்டமாக திறக்கப்பட உள்ளது...

No: 278 Kandy Road,
Nunavil,
Chavakachcheri.

கஜானன் பன்முக சேவைகள் - மீசாலை